டிசம்பர் 1975 விலை 75 சதம்


# சிரித்திரன்






செய்தொழிலே
தெய்வம்
சிரிப்பே சீவியம்

## மாதங்களில் அவள் மார்கழி. . . .



கண்நிறைந்த கணவனுக்கு
கண்குளிரக் காட்சியளிப்பது
அவள் அணிந்திருக்கும்
'லலிதா' நகைகளே...

பழையன கழிந்து
புதியன புகும் புத்தாண்டில்
புத்தம்புது நவீன டிசைன்களிலான
நகைகளைத் தெரிவுசெய்ய—

V

# லலிதா ஜூவலறி

இல. 133, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

உரிமையாளர்: செல்லையா இந்திரசித்து



மகனுக்கு லண்டனுக்கு எழுதி
மார்கழிக் குளிருக்கு . . .
ஒரு கம்பளிப் போர்வையை
எடுப்பித்திருக்கலாமே . . .

**கனகலிங்கம்சுருட்டு இருக்கையில்**
**கம்பளிப் போர்வை எதுக்கு?**

# வி. கனகலிங்கம்பிள்ளை அன் சன்ஸ்

17, சென்ஜோன்ஸ் வீதி,
கொழும்பு-11

தந்தி: KANCIGARS — போன்: 25883

பிரதம தபாற்கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது. பதிவு இலக்கம்: கியூ பி 59/300

# ஓவியங்கள் மத்தியில் அவள் ஒரு காவிய நூல்



அந்த அழகி ஆடைத்தையல் அலங்காரத்திற்கு பாவிப்பது

முயல் மார்க் தையல் நூலே

தயாரிப்பாளர்கள்;

## சம்பியன் திரெட் மனுபக்சரிங் கம்பெனி

கொழும்பு-12


122, நாவலர் வீதியில் வசிக்கும் சி. சிவஞானசுந்தரம் அவர்களால், 122, நாவலர் வீதியிலுள்ள கவின் ...ச்சகத்தில் அச்சி...டு வெளியிடப்பெற்றது.

# சிரித்திரன்

செய்தொழில் தெய்வம்!        சிரிப்பே சீவியம்!

மார்கழி- 75        நகை- 13        சுவை-2

## நரகலோகத்தில் சித்திரவதை



வீடு பட்டினியில் கிடக்க கடன் வாங்கி படம் பார்த்த பாவாத்மாவிற்கு கிடைக்கும் நரகலோகத் தண்டனை.

## வளவளா சியாமளா




## இரக்கம்

★ ஆண்டுமலர் அட்டையில் தம்பர் கூறும் ஜோக் அர்த்தம் நிறைந்தது.

—M.கிங்கிணி தேவி, கல்முனை

● மாத்தளை சோமுவின் அவனுக்கும் ரோசம் உண்டு கதையைப் படித்த போது வறுமையின் காரணமாக இப்படியும் மனிதர்கள் சிறுமைப்படுகிறார்களே என்ற வேதனை எடுத்தது.

—பஸ்லியா மஜித்
தெமட்டகொட

● இளங்கீரனின் அன்னை அழைத்தாள் நாவலின் முதல் அத்தியாயமே எம்மைத் திணறடிக்கச் செய்கிறது. அவருக்கு எமது பாராட்டுகள்.

-நா. மகேந்திரலிங்கம், சங்கானை

● ஆண்டுமலர் சிரிகதைகள் சிறுகதைகள், கவிதைகள் துணுக்குகள் யாவும் எம்மை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தி விட்டன.


— முகம்மது ஹுஸனி
கல்முனை.

● 12வது ஆண்டுமலர் சிறுகதைகள் யாவும் தரமானவை. மனித மனங்களின் அலைப்பாடுகளை நன்கு வெளிச்காட்டியிருந்தமை சிறப்பாக இருந்தது.

க. ஐ. யோகராசா
கல்முனை

● சிவலிங்க ராசாவின் உறவின் பின்னணி'யில் அருமையான கதை பாவம் சிவராசா.

R.ராமநாதன்-வவுனியா



மு. ரமணன்,,
மட்டுநகர்.

கே. திருமணம் செய்தவன் வாழ்க்கை சோக நாடகம் தானு?

ப:ஆம் தான் ஏன் திருமணம் செய்தேன் எனக் கண்ணீர் வடிப்பான்... அதே சமயம் தன் மகளுக்குத் திருமணவாகவில்லையே என்றும் கண்ணீர் வடிப்பான்.

0 0

காந்தராஜா,
கரவெட்டி,

கே: தீர் அண்மையில் ரசித்த நகைச்சுவைக் காட்சி எது?

ப: உடலை உடையால் மறைக்க விரும்பாப் பெண்கள் நீண்ட கியூ வரிசையில் பொறுமையாக கொட்டும் மழையில் சேலை வாங்குவதற்கு சிலையாய் நின்றகாட்சி.

0 0

எஸ். கர்தப்பிள்ளை
வவுனியா,

கே. சிரிப்பவர்கள் எல்லோரும் நல்லவர்கள் தானே?

ப: சிரிப்பவர்களெல்லாம் நல்லவர்களுமல்ல, சினப்பவர்களெல்லாம் கெட்டவர்களுமல்ல.

0 0



எஸ. எம். யூசுப்,
மன்ஞர்.

கே: திருமணம் செய்யும் ஆண் பரிதாபத்திற்குரியவன் என்கிறேன்?

ப; ஆம்... பெற்ரோரிடம் அடிமையாக இருந்த பெண்ணிற்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்துவிட்டுத் தான் அவளுக்கு அடிமையாகின்ருன்.

0 0

எஸ், இஸ்ஸதீன்
அடம்பன்,

கே: மனிதனுக்கு ஏன் இந்தக் வட்டிவாங்கும் குணம்?



ப: மாணவஞக இருக்கும் போது வட்டிவாங்கும் கணக்கு ஆசியயரிடம் கற்ற பாடமாயிருக்கலாம்.

● ★

சுபத்திரா பத்மநாதன்,
மட்டக்களப்பு.

கே: பெண்கள் ஏன் பெருந்தொகை பணத்தை தமது உடையில் செலவிடுகிமுர்கள்.

ப; ஆண்கள் காதலிப்பது தமது கட்டழகையல்ல தாம் கட்டும் சேலையை என்று நினைப்பவர்களாயிருக்கலாம்.

0 0

ஏ. எம். ஜமால்
திக்குவலை,

கே: கடவுளின் படைப்புகளில் மனிதன் மேலானவன்... சிந்திக்கும் வலிமையும் பேசும்வல்லமையும் மனிதனுக்குத்தான் உண்டு.

ப: ஆகையால்தான் பிறரையும் குறைகூறிக்கொண்டும் தன்னைப் புழுகிக்கொண்டும் திரிகின்ருன்.

செல்வி கனகமணி தம்பையா
மாவிப்பாய்,

கே: மனிதஞல் சத்தம் போடாமல் வாழமுடியாதா!

ப; அது இரைதேடப்போடும் இரைச்சல்... அரசியல்வாதி மேடையில்... வழக்கறிஞர் கோர்ட்டில்... ஆசிரியர் வகுப்பில்,

★ ★

ரெஜிஞ பொன்னம்பலம்,
வெள்ளவத்தை,

கே: எமது ஆடை அணிகளின் நாகரீகம் ஏன் அடிக்கடி மாறிக்கொண்டிருக்கின்றது?

ப: அவலட்சணமாகையால் போலும்... மலர் தனது தோற்றத்தை மாற்றுவதில்லையே.

0 0

எஸ். கர்ஞகரநாதன்,
காத்தான்குடி

கே: தரமில்லா கலைப்படைப்பைப் படைத்துவிட்டுதாம்ஏதோ அமரகலை படைத்தவர்கள் மாதிரி தம்பட்டமடிப்போரைப் பற்றி உமது கருத்து?

ப; கோழியும் ஒருசைபரை இட்டுவிட்டு கொக்கரித்துத்தான் திரியும்,

0 0

எஸ். கமலேந்திரன்,
முள்ளியவளை,

கே; ஊக்கமது கைவிடேல் என எழுதி தன் மேசை முன் தொங்கவைத்து தூங்கும் நண்பனை என்ன செய்யலாம்?

ப; ஊக்கமது கைவிடேலில் இருக்கும் ஊவன்னாவை அழித்து தூவன்னாவை எழுத வேண்டும்.

★ ★

வ,தியாகராஜா
பரந்தன்,

கே: மனிதன் பொதுநல வாதியா சுயநலவாதியா?



ப: சுயநலவாதி... கடிதத்தை தபால் பெட்டிக்குள் போடுவான்... குப்பையை குப்பைத் தொட்டிக்கு வெளியால் போடுவான்,

0 0

எஸ். யூசியஸ்,
மாங்குளம்.

கே. நாம் கலைஞரை இறந்த பின்புதான் மதிக்கின்றோம். உண்மையா?

ப: எங்கே ஐயா மதிக்கின்றோம், இரங்கற் கூட்டத்திற்கு கூட குறிப்பிட்ட பேச்சாளர்கள் வருகிறார்களில்லையே.

★ ★

பரீனா பொன்னம்பலம்,
கைதடி,-யாழ்ப்பாணம்

கே; இம்முறை வரவுசெலவுத் திட்டத்தை பாராட்டாதவலும் உளரோ?

ப: உளர்... எனது பாட்டி பாராட்டவில்லை.... பல்லில்லாப் பாட்டிக்கு பற்பசை விலை குறைந்தென்ன!

0 0

ஏ. எஸ். அஸ்மினா
மாத்தளை,

கே: கல்யாணப் பேச்சின் போது பெண் எப்படியிருப்பாள்?

ப: கண்ணை மூடி காதைத் திறந்து வைத்திருப்பாள்.

★ ★

ஏ. அருணாசலம்,
மாத்தளை.

கே: பட்டப்படிப்புக்கு மேலான படிப்பு உண்டா?

ப: உண்டு. Wanted Column.

● ● ●

மு. கதிர்காமத்தம்பி,
விசுவமடு.

கே; தெய்வலோகப் பெண்கள் பூலோகம் வந்தால்!

ப: ஜவுளிக் கடைக்கு முதல் போவதா அல்லது நகைக் கடைக்கு முதல்போவதா என்று அங்கலாய்ப்பில் தடுமாறுவார்கள்

ஃ ஃ

எம். சித்திராவதி,
தெல்லிப்பளை,

கே; மனிதனுக்கு கடவுள் பெயர் வைக்கலாமா?

ப. அபச்சாரம், அபச்சாரம்... கடவுளைத் திட்டவேண்டி நேரிடுமல்லா.

ஃ ஃ

என், எஸ். எஸ். அக்பர்,
திக்குவல்லை

கே: பெரும்பான்மை சிறுபான்மை உறவு எப்படியிருக்க வேண்டும்?

ப; இராமர் பரதன் பாசம் போன்றதாயிருக்க வேண்டும்.

★ ★

எம் என் மெஹிதீன்,
வவுனியா

கே: மகுடியாரே... மாரி காலம் குளிரவில்லையா?

ப: என்ன செய்வது...... இப்போ வீட்டிலெல்லாம் நைலோன் நைலெக்ஸ் சாரிதான் உண்டு. குளிருக்கு எதால் மூடுவது.

● ●

க. பத்மராஜா
திருகோணமலை,


ஒரு நாடு எப்போது அழிகின்றது!

ப; பருவ மங்கையும் பருவ மழையும் தவறும்போது,

0 0

வ. அன்னராணி
பெரியகடை,
மன்னார்,

கே; பிரமச்சாரி திருமணம் செய்தால்?



ப: குறுகிய கைக்குட்டையை சலவைசெய்யப் பஞ்சிப்பட்ட பிரமச்சாரி திருமணமானதும் மனைவியின் நீண்ட சாரியை பொறுமையுடன் சலவை செய்வான்.

ஃ ஃ

வீடுபோல் சொர்க்கம் வேறில்லை
வீட்டை சொர்க்கம்போல் விளங்கவைப்பது
தளபாடங்களே-

உங்கள் இல்லங்களுக்கு
எழிலூட்டும் நவீன உயர்தர
தளபாட வகைகளுக்கு. .

# சிவா பேணிச்சர்

**மொம்சாக் கட்டிடம்**
**11/5 ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**



## 'பொன்' முட்டைஇடும் கோழிகள்

?

கோழிப்பண்ணை அதிக வருமானம் தரும்
சிறந்த தொழில்
வீட்டிற்கொரு கோழிப்பண்ணை
வீட்டிற்கும் நாட்டிற்கும்
செல்வத்தைப் பெருக்கும்

உங்கள் கோழிகள்
அதிகமுட்டைகள் இடத் தேவையான
சத்துள்ள கோழித்தீன் வகைகளுக்கும்

## விஜயா ரேடிங் கொம்பனி

69, ஆட்டுப்பட்டித்தெரு
கொழும்பு-13



## மகாராஜா நிறுவனத்தார்

தயாரித்தளிக்கும்

தரமிக்க
பாவனைப் பொருட்களுக்கும்
அதி சிறந்த
'சு ர ஸ்'
கருப்பட்டிக்கும்

விஜயம் செய்யுங்கள்

# கல்கி சன்ஸ்

**147, ஸ்ரான்லி வீதி**
**யாழ்ப்பாணம்.**

பாகம்-1

அத்தியாயம்-2

ரஞ்சிதம் கண்ணைத் துடைத்துக்கொண்டு சற்றுப் பரபரப்போடு அதை வாங்கிப் படித்துவிட்டு அதே பரபரப்புடன் ''இதென்ன அத்தான்'' என்று சிறிது திகைப்போடு கேட்டாள்.

''ஏன் உனக்கு விளங்கேல்லியா?''

''நல்லாய் விளங்குது. நீங்கள் இங்கிருந்து எழுதமாட்டன் எண்டு சொன்னதுக்கு நான்தான் காரணமெண்டு பயந்துபோனன். நல்லவேளை, நான் காரணமில்லை. இப்போ உங்களுக்கு உலகத்தையெல்லாம் சுத்திப் பார்க்கவேண்டுமென்ற ஆசை பைத்தியமாய்ப் பிடிச்சிருக்குது. நீங்கள் இங்கிருந்து கிளம்பப்போறீங்கள்; அதுதான் விஷயம்"



''ஓம்... அந்த ஆசையை நிறைவேற்றிக்கொள்ள எனக்குச் சக்தியில்லையெண்டால் என்னால் அதை அடக்க முடியவில்லை- திடீரென்று ஒருநாள் இந்நாட்டை விட்டுக் கிளம்பியேவிடுவன். அது மட்டும் நிச்சயம்"

ரஞ்சிதத்தின் முகம் திடீரென்று வாடியது. பால்யத்திலிருந்து ரவீந்திரனுடன் பழகி வாழ்ந்த அவள் இதுவரை அவனை விட்டுப் பிரிந்ததேயில்லை. இப்போது அவனுடைய மனத்துடிப்பைத் தெரிந்துகொண்டதும் கலவரமும் கவலையும் நெஞ்சில் மூண்டன. விழிக்கோணங்களில் திரும்பவும் கண்ணீர் திரண்டது: ''அப்போது நீங்கள் என்னைப் பிரிந்துபோகப் போறீங்கள், இல்லையா அத்தான்?'' என்று விக்கிய குரலில் கேட்டாள்.

ரவீந்திரன் மெல்ல நடந்து ஜன்னலண்டை வந்து நின்றுகொண்டு வெளியே பார்த்தான். மேற்கே வானத்திரையில் பிரகாசித்துக்கொண்டிருந்த மாலைச் சூரியனின் வர்ண ஜாலக் கதிர்கள் ஒன்றுடன் ஒன்று கலந்து மஞ்சள் வெய்யிலாகி மயக்கந் தரும் ஒரு ஒளியை வீசிக்கொண்டிருந்தது. அதில் லயித்தபடி சிறிது நேரம் மௌனமாக நின்ற ரவீந்திரன் முகத்தைத் திருப்பாமலே சொன்னான்.

''இல்லை. உன்னையோ, என்னைப் பெற்றெடுத்த இந்தப் பொன்னாட்டையோ நான் நிரந்தரமாகப் பிரிந்துபோயிடுவென் என்று நினைக்காதே. பறவைகள் என்னதான் உயர உயரப் பறந்தாலும், எல்லையற்ற வானமண்டலத்தைச் சுற்றினாலும் கடைசியில் தன் கூட்டுக்கு வந்துதான் ஆகவேண்டும்: நானும் ஒரு பறவையைப்போல...''

ரவி இவ்வாறு செல்லியபோதிலும் ரஞ்சிதத்தின் மனச் சஞ்சலம் மறையவில்லை: பரபரப்பு ஓயவில்லை. ''ஊர் சுத்தப்போகும் எல்லாரும் பறவைகளைப்போல அல்ல. சுடலைக்குப் போன பிணத்தைப்போலத் திரும்பி வராதவையும் உண்டு உங்கள் ஐயாவைப் போல'' என்று அவனுடைய பாணியில் அதே சமயம் தொய்ந்துபோன குரலில் கூறினாள்.

ரவீந்திரன் சரேலென்று திரும்பி அவளைப் பார்த்தபடி ஜன்னலில் சாய்ந்தவன் ஒரு நிமிடம் தன் தந்தையைப்பற்றி நினைத்தான். அவரும் அப்படித்தான். ஒருநாள் யாருக்கும் சொல்லாமல் ஊரை விட்டுப் போனவர் எத்தனையோ வருஷங்களாகியும் இன்னும் திரும்பவேஇல்லை. அதை நினைத்துப் பார்த்தான்.

மனக்கண்முன் தந்தையின் உருவம் மங்கலாகத் தெரிந்தது. கல் விழுந்த தடாகத்தைப்போல் அவன் உள்ளமும் கலங்கியது. அவருடைய நினைவை அறுத்துவிட்டுச் சொன்னான் ''ஐயாவின் மனப்போக்கு எப்படியோ; ஆனால் என் உயிர் நான் பிறந்த இந்த மண்ணில்தான் பிரியும்; என் உடல் இங்குதான் வெந்து சாம்பலாகும்''

இறுகி உறைந்திருக்கும் உறுதியைப் பளிச்சென்று காட்டும் ரவீந்திரனின் வார்த்தைகள் கவலையால் சூடேறியிருந்த ரஞ்சிதத்தின் உள்ளத்தில் குளுமையைத் தெளித்தன. ஈரமாயிருந்த அவளுடைய இமைகள் இலேசாய் மூடித் திறந்தன. வெப்பமான நெடிய மூச்சுப் பறிந்தது. எனினும், என்றைக்கோ ஒருநாள் அவன் தன்னை விட்டுப் போகவே செய்வான்; அந்த நாளும் விரைவாக வந்துவிடும் என்று நிச்சயமாகத் தெரிந்ததும் அதை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. என்னதான் இருந்தாலும் உங்கள் மனசு கல்லுத்தான்'' என்று துக்கத்தால் தொண்டை அடைக்கக் கூறினாள்.

''கலைஞர்களின் மனசு கல்லாய் இருப்பதில்லை"

''அது என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் உங்கள் மனசு நிச்சயமாகக் கல்லுத்தான். உங்களுக்கு இளகிய மனமெண்டு கதைகளிலும் நாவல்களிலும்தான் காட்டிக்கொள்றீங்களே தவிர, உண்மையில் அது இறுகிப்போன கல்லுத்தான். இல்லையெண்டால் என்னை விட்டுப் பிரிஞ்சு ஊர் சுற்ற நினைப்பீர்களா?"

ரவி கலகல என்று சிரித்தான், ''ஏன் நீயும் என்னுடன் வரலாமே?"

துயரத்தால் இருள் மூடிக்கிடந்த ரஞ்சிதத்தின் முகம் மகிழ்ச்சியால் திடீரென்று ஒளி வீசியது. விழிகளை மலர்த்தி உற்சாகத்துடன் அவனைப் பார்த்தாள். மறுகணம் அந்த உற்சாக

மும் மகிழ்ச்சியும் மறைந்தன. சோர்வுடன் ''உங்களோடு நானும் வந்தால் எவ்வளவு சந்தோஷமாயிருக்கும்; ஆனல்...'' என்று நிறுத்தினுள்:

''எனக்குத் தெரியும் ரஞ்சி. பெண்களுக்கு என்னதான் சிறகு முளைத்தாலும் அவர்கள் கூண்டுக் கிளிகள்தான். அவர்களுக்கு ஊர் உலகத்தைச் சுற்றிப் பறக்க ஏலாது''

''மெய்தான். பெண்ணுய்ப் பிறந்தால் இந்தத் துர்ரதிர்ஷ்டந்தான்" என்று சலித்துக் கொண்ட ரஞ்சிதம் ''இருந்தாலும் உங்களைப் போல ஆணுகவும் பிறக்கப்படாது" என்ருள்.

''ஏன்?''

தங்களுடன் பிரியமாயிருக்கும் பெண்ணைத் தவிக்கவிட்டுப் போட்டும் ஓடிவிடுவினம். பெண் மனசு தெரியாத ஆணுக ஏன் பிறக்கவேண்டும்; எங்களைப் போல உள்ள பெண்களை கவலையால் ஏன், துடிக்க வைக்கவேண்டும்?"

ரவி லேசாய்ச் சிரித்தான் ''நீ என்னைப் பிழையாக நினைக்கிருய்?"

ரஞ்சிதம் ஒன்றும் பேசாமல் தன் கையிலிருந்த டைரியின் தாள்களைப் புரட்டியவண்ணம் சிறிது நேரம் மௌனமாக இருந்தவள் ''பெண்ணின் மனசைத் தெரிஞ்சுகொள்ளாத நீங்கள் உங்கள் கதைகளிலும் நாவல்களிலும் அவர்களின் மனசையும் காதலையும் வர்ணிக்கிறீர்களே. அது அதிசயந்தான்" என்று தலையைக் குனிந்துகொண்டே கூறினுள்.

''இதில் அதிசயம் என்ன? எழுத்தாளனுக்கு ஊகமும் கற்பனையும் அதிகம். அதை வைத்துக்கொண்டு எழுதித் தள்ளுறன் எனக்கு இதெல்லாம் தெரியுமா? இந்த அனுபவமெல்லாம் எனக்கு இருக்குதா என்று வாசகர்கள் சிந்திக்கமாட்டார்கள். அதில் அவைக்கு அக்கறையுமில்லை. சுவையாக இருந்தால் சரி. விழுந்து விழுந்து படிப்பார்கள். அதுதான் அவையின் சுபாவம்''

''நீங்கள் கல் மனசு படைத்தவர் மட்டுமல்ல, வாசகர்களை ஏமாற்றுவதில் கைதேர்ந்தவரும் கூட''

''நான் ஏமாற்றவில்லை, இலக்கியத்தின் குணம் அது'!

''இப்படிச் சொல்லி நீங்கள் தப்பிக்கொண்டாலும் என்னை ஏமாற்றப்பார்க்கிறீர்களே, அதுக்கென்ன சொல்கிறீர்கள்?':

''நீ அப்படி நினைக்கிருய். நான் உன்னைமட்டுமல்ல எவரையும் ஏமாற்றவில்லை"

''நீங்கள் பொய் சொல்கிறீர்கள்''

''பொய்யென்று மற்றவர்கள் நினைப்பதெல்லாம் உண்மையாகிவிடாது''

''நீங்கள் எழுத்தாளர் உங்களோடு கதைச்சு வெல்ல ஏலாது"

''எல்லாரும் அப்படித்தான் நினைக்கிருர்கள் ஆனல் உண்மை அது அல்ல''

''அப்போ எது உண்மை?''



பிச்சைக்காரன்:
அம்மா தாயே... பசியிலே கண் புகையுது, காதடைக்குது...

வீட்டுக்காரி;
ஏய்... கண்ணிலே காதிலே நோயென்ருல் ஈ. என். ரி. ஸ்பெஷலிஸ்ட் இடம் போகவேணும்... இது தெரியாதா...

— ஜோக்கிரட்டீஸ் —

''என்னை யாரும் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை. அதுதான் உண்மை"

''நீங்கள் மற்றவர்களை விளங்கிக்கொள்ளாதபோது அதை மற்றவையிடமிருந்து எதிர்பார்க்கிறது என்ன நியாயம்?"

''நான் எதிர்பார்க்கிறதாகச் சொல்லேல்லியே...''

''நீங்கள் ஒரு அதிசயமான ஆள்''


அழகான தங்க நகைகளா? ↓

டைமா நகைமாளிகை

47, செட்டியார்தெரு, கொழும்பு-11

அலங்கார ஜவுளித் துணிகளா? ↓

சிங்காரம்ஸ்

தொலைபேசி: 20875

"அப்படி இருக்கத்தான் நான் விரும்புகிறேன்"

"ஏன் இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்..."

"வேறு எந்தமாதிரி பேச வேண்டும் என்கிறாய்..."


"நீங்கள் வேண்டுமென்றே என்ர மனசைக் குடைகிறீர்கள்"

"நான் குடையேல்லை நீ அப்படி நினைக்கிறாய்..."

ரவி இவ்வாறு சொன்னதும் ரஞ்சிதம் அதற்குமேல் ஒன்றும் சொல்லாமல் வாயை மூடிக் கொண்டாள். தன் மனசைத் தெரிந்துகொண்டும்வார்த்தைக்கு வார்த்தை, பதிலுக்குப் பதில் இப்படிப் பேசுகிறாரே என்று எண்ணும்போது ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. அதை அடக்க அதரங்களைப் பற்களால் கடித்துக் கொண்டாள். அதே சமயம் "உன்ர மனசில் உள்ளதைத் திறந்து சொல்லேன்" என்று உள் மனசு உசுப்பியது. அதற்கு மேல் அதை வைத்திருக்கமுடியவில்லை. உடனே "உங்களை ஒரு பெண் காதலிப்பதை நீங்கள் விரும்பேல்லியா!" என்று கேட்டாள்.

"இல்லை" என்று தலையை ஆட்டிய ரவி "என் சுயேச்சையான போக்குக்கு என் சுபாவத்துக்கு எவரும் கால்கட்டாக இருக்கிறதை நான் விரும்பவில்லை" என்றான்.

அவன் இதைச் சொன்னதுமே ரஞ்சிதத்தின் உள்ளம் கல்லெறியப்பட்ட கண்ணாடிபோல் சுக்குநூறாகிவிட்டது. அதிர்ச்சியால் சிலையாகி நின்றாள். அவளுடைய விழிகளிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் இமை வெட்டும் நேரம் தொங்கி நின்றுவிட்டு சடக்கென்று கன்னத்தில்உருண்டு விழுந்தன. மறுகணம் "நீங்கள் பூலோகத்து மனிதரல்ல. நானும் இந்த உலகத்தில் பிறந்திருக்கப் படாது" என்று தாங்கமுடியாத துயரமும் கோபமும் ஒன்றுசேர படபடப்புடன் கூறிவிட்டுச் சரே



மனைவி: என்ன தேடுறீங்க?

கணவன்; சாவிக்கொத்து எங்கே வைத்தேனென்று ஞாபகமில்லை. சாவிக் கொத்தைத் தேடுவதற்கு மூக்குக் கண்ணாடி எங்கே வைத்தேனென்று ஞாபகமில்லை.

லென்று வெளியே சென்றுவிட்டாள்:

ரவி அவள் போன வாசலையே வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தான். சிறிது நேரத்தின்பின்


"ரஞ்சி, என்னை நீ காதலிப்பது எனக்கும் தெரியாமலில்லை. உன் இதய மாளிகையில் கொலுவீற்றிருக்கும் என்னுடன் நீ அந்தரங்கமாகப் பேசுவாய், விளையாடுவாய், கொஞ்சுவாய், கோபிப்பாய் என்றெல்லாம் எனக்குத் தெரியும். இதையெல்லாம் மறைத்தும் மறையாமலும் தெரிந்தும் தெரியாமலும் என்னிடம் எத்தனையோ தடவை பிரதிபலித்திருக்கிறாய். நீ என்னைப் பூலோகத்து மனிதனல்ல என்று சொன்னாய், இல்லை. நானும் இந்த மண்ணில் வளந்தவன்தான். உன் பேச்சின் அர்த்தத்தை, உன் பார்வையின் பொருளை, நீ பழகும் விதத்தைப் புரிந்துகொள்ள முடியாத அப்பாவியல்ல. எனக்கு எல்லாம் தெரியும் ரஞ்சி- எல்லாம் தெரியும். இருந்தும்...

இந்த வீட்டில் என்னை உயிருக்குயிராய் நேசிக்கிறவள் நீமட்டும்தான். உன் ஐயா, அம்மா, அண்ணன்மார் எல்லாருமே என்னை அலட்சியம் செய்தபோதிலும், நீ ஒருத்திமட்டும்தான் என்மீது பரிவும் பாசமும் காட்டுகிறாய். அதேபோல் இந்த வீட்டில் உன்னைத்தான் நான் நேசிக்கிறேன். உன்மீது எனக்குப் பந்தமும் பாசமும் நிறைய உண்டு. இருந்தும் ...

உன்னை நான் காதலிக்கவில்லை: காதலிக்க விரும்பியதுமில்லை. அவ்விதமான ஓர் எண்ணம், உணர்ச்சி எனக்கு ஏற்படட்டதுமில்லை. உன்னை நான் அன்பு மிகுந்த சிநேகிதியாகவும் அதே நேரத்தில் பாசம் மிகுந்த ஒரு தங்கையாகவுமே கருதுகிறேன். அந்த உணர்வுதான் உன் மீது எனக்கு இருக்கிறது.

ரஞ்சி, என்னை இந்தப் பூலோகத்து மனிதனல்ல என்று சொன்னாய். நானும் இந்தப் பூமித்தாயின் புதல்வன்தான். ஆனால் காதலைப்பற்றியோ, அதைப்பற்றிய நினைவுகளோ எனக்கு இப்போது இல்லை. என் உள்ளம், என் சிந்தனை, என் உணர்ச்சிகள் எல்லாமே வேறொரு திசையைச் சுற்றிச் சுழல்கின்றன. அதைத்தான் என் டைரியில் தீட்டியிருக்கிறேன். நீ அதைப் படித்துவிட்டு நான் ஊர் சுற்ற ஆசைப்படுகிறேன் என்று சாதாரணமாகக் கருதிவிட்டாய். அதற்குமேல் நீ புரிந்துகொள்ளவில்லை; உனக்குப் புரிந்துகொள்ளவும் முடியாதுதான்...

நான் உன்னைவிட்டுப் பிரிந்து போக எண்ணுவதும், உன்னைக் காதலிக்கவில்லை என்று சொன்னதும் உன் உள்ளத்தை நொறுக்கிவிட்டது என்பது உன் முகமும் உருண்டு விழுந்த கண்ணீர்த்துளிகளும், விரைந்து போன போக்கும் தெளிவாய்க்காட்டிவிட்டன.



● ஏன் அவருக்கு அடித்தாய்

★ நான் பசியோடு நிற்க அவர் தான் பசியைப் பற்றி எழுதிய கதையைப் புழுகிக்கொண்டு நிண்டார்... அடியிலை விட்டிட்டன்.

— ஜோக்கிரட்டீஸ் —

உன் கண்ணீரையும், உன் இதயத்தின் ஓலத்தையும் என தாக்கிக்கொள்வதைத் தவிர நான் வேறு என்ன செய்யமுடியும் ரஞ்சி?

உன் காதல் கனவுகளைச் சிதைத்துவிட்ட கொடியவன்-கல்நெஞ்சக்காரன் என்று நினைத்து என்னுடன் பேசுவதையும், பழகுவதையும் இன்றுடன் நிறுத்திக்கொள்ளவும் செய்வாய். இதனால் இந்த வீட்டில் என்னை நேசிக்கும் ஒரே ஒரு ஜீவனையும் நான் இழந்துவிட்டேன். இந்த நிலையில் நான் அதிகநாள் இங்கே இருக்கமுடியாது. என் பயணம் விரைவாகிவிடும்.

மரத்தில் பூக்கும் எல்லாப் பூக்களுமே காய்ப்பதில்லை. காய்த்தவையெல்லாம் கனியாவதுமில்லை. நெஞ்சத்தில் பூத்து நிற்கும் கனவுகளும் அப்படித்தான். உனக்காக நான் வருந்துகிறேன்.

கடைசியாக உன்னிடம் நான் வேண்டிக்கொள்வதெல்லாம் என்னைக் கல்நெஞ்சுக்காரன் என்றும், கொடியவன் என்றும் நினைக்காதே... நான் நிச்சயமாக கல்நெஞ்சக்காரன் அல்ல; கொடியவன் இல்லை...'' என்று அவனுடைய பேனா எழுதிக்கொண்டிருந்தது

o o o

பத்தாந் திகதி சென்னையிலிருந்து புறப்படும் ரஜசலா கப்பலில் நான் வருகிறேன். என்னைப் பினாங்குத் துறைமுகத்தில் சந்திக்கவும்...

-ரவீந்திரன்-

தந்தியைப் படித்ததும் புண்ணியமூர்த்தியின் விழிகள் அதன் எழுத்துக்களிலேயே சில விநாடிகள் குத்திட்டு நின்றன.

தனது ஒரேயொரு மகன் ரவீந்திரனுக்கு ஐந்து வயதாயிருக்கும்போது புண்ணியமூர்த்தி இலங்கையை விட்டுப் பிரிந்து வந்து பதினெட்டு வருடங்களாகிவிட்டன. இத்தனை நாட்களில் தன் மகன் என்றாவது ஒருநாள் தன்னைக் காண மலேயாவுக்கு வருவான் என்று அவர் கற்பனை கூடச் செய்து பார்த்ததில்லை.

இப்போது அவன் திடீரென்று வருகிறான். அவரால் அதை நம்பவே முடியவில்லை. திகைப்பும் ஆச்சர்யமும் அவருடைய மனதைக் கிளறின. ஆனால் விழிகளில் கலந்து நிற்கும் அத் தந்தியின் வசனங்கள் மகனின் வருகையை உறுதியாக்கிய பிறகு அவரால் எப்படி நம்பாமல் இருக்கமுடியும்? அவன் நிச்சயம் வருகிறான் என்று தெரிந்துவிட்டது. மறு விநாடி எழுந்து நிற்கும் திகைப்போடும், வியப்போடும் கட்டு மீறிய ஆனந்தமும் உற்சாகமும் கலந்துவிட்டன.

தந்தி கிடைத்ததிலிருந்து அவருக்கு இருப்பே கொள்ளவில்லை. எத்தனையோ உணர்ச்சிகளும், எண்ணங்களும் மனம் என்னும் மிருதங்கத்தில் ஆவர்த்தனம் வாசித்துக்கொண்டிருந்தன' கப்பல் வர இன்னும் ஒருவாரம் இருந்தபோதிலும் தந்திகிடைத்த மறுநாளே ஈப்போவை விட்டுப் பினாங்குக்குக் கிளம்பிவிட்டார்.

பினாங்குக்கு வந்தபிறகு மகனைக் காணும் தாகம் மேலும் அதிகமாகிவிட்டது. அவருக்கு ஒருநாள் போவது ஒரு யுகம் போவது போலிருந்தது. ''கப்பல் கப்பல்'' என்று அவருடைய மனம் ஜெபம் செய்துகொண்டிருந்தது. விடிந்து எழுந்ததும் தங்கியிருந்த ஹோட்டலை விட்டுக் கிளம்பித் துறைமுகத்தடியிலும் அதை அடுத்துள்ள கடற்கரையிலும்தான் பொழுதைக் கழிப்பார். தனக்கு முன்னால் விரிந்து கிடக்கும் கடலைப் பார்த்துக்கொண்டிருக்கும்போதே சிந்தனையும் சென்ற கால வாழ்க்கையை இரைமீட்டத் தொடங்கிவிடும். கடந்தகால வாழ்க்கை என்பது ஜீரணித்துப்போன உணவுதான். என்றாலும் அதை நினைத்துப் பார்க்காத மனிதரில்லையே. அதில் தான் எத்தனை ரசம்! எத்தனை ருசி! அதை எப்படி மறக்க முடியும்!

அன்றும் பினாங்குக் கடற்கரையில் அமர்ந்து வானத்தைப் போல் பரந்து கிடக்கும் கடலைப் பார்த்துக்கொண்டிருந்தார். அவருடைய விழிகள் அந்த ஆழிய நீர்ப் பரப்பைப் பார்த்துக்கொண்டிருந்தாலும் மனம் ஆயிரத்தி ஐந்நூறு மைல்களுக்கு அப்பால் இந்துமகா சமுத்திரத்தில் நிலம் பரப்பியிருக்கும் தன் தாய் நாடான சின்னஞ்சிறிய அழகிய இலங்கைத் தீவின் வட பகுதியில் உள்ள யாழ்ப்பாணத்தில் சுழன்று கொண்டிருந்தது. அதைப் பார்த்தவுடனேயே அவருடைய நினைவுச் சுவட்டில் அழியாத அடையாளமாகப் பதிந்துவிட்டிருக்கும் சிவக்கொழுந்து முன்னால் வந்து நின்று சிரித்தான். சிவக்கொழுந்து மட்டுமா, இலங்கையிலிருந்த போது நடந்த நிகழ்ச்சிகளும் ஊர் நினைவுகளும் வந்து நின்றன.

(தொடரும்)

# பழமைகள் மரணிக்கின்றன

செ. கதிர்காமநாதன் ஞாபகார்த்த சிறுகதைப் போட்டியில் 1-வது பரிசு பெறும் சிறுகதை-

மு. கங்கா

நாகர்கோவில்—

ஒரு சிறிய கிராமம். பருத்தித்துறையில் இருந்து கிழக்கு முகமாகப் பயணஞ் செய்தால், பத்தோ பன்னிரண்டு மைல் தொலைவில் அடைந்து விடலாம்.

மழைக்காலத்தில் அது மருத நிலத்திற்குரிய தோற்றத்தோடேயே இரம்மியமாகத் துலங்கும் ஆங்காங்கே பசுமையான பரந்த வயல்வெளிகளும், சிறு சிறு குளங் குட்டைகளும் அதை இன்னும் மெருகூட்டும்.

வெள்ளப் பெருக்கு ஏற்படும் காலத்தில், தொண்டைமானாறு பாலம் மூடப்பட்டிருப்பின், இந்த வயல்வெளிகள் யாவும், ஒரே கடலாகத் தோன்றும்.

அவ்வேளைகளில் அங்குள்ள மக்கள் கட்டுமரங் கட்டிக் காட்டு வீறகு வெட்டச் செல்வதுகூட அழகாக இருக்கும்.

வரட்சிக்காலம் அங்குவருகை தரும் புதிய மனிதர்களுக்கு பாலைவனங்களை நினைவு கூரும். வரண்ட வெப்பக் காற்று சலனமற்றிருக்கும். ஒரே புளுக்கமும் வேகாரும். வயல்வெளிகள் பழுப்பான புற்தரையாகவும், குளங் குட்டைகள் நீர் வற்றிக் காய்ந் வெடித்த தரையாகவும் இருக்கும்.

வயல் நிலங்களின் வடஓரத்தே குடியிருப்புக்கள் காணப்படுகின்றன. அங்கே செறிவாகவும் நெருக்கமாகவும் பனை மரங்களும் தென்னைமரங்களும் காணப்படுகின்றன.

— இவை தவிர மற்றை இடங்கள் பெரும்பாலும் பற்றைக் காடுகளாகவே உள்ளன. அங்கும் அதை அண்மித்திருக்கும் வெண்மணல் வெளிகளிலும் ஆதியில் மக்கள் குடியிருந்துள்ளனர். இதற்கு ஆதாரபூர்வமான அகப்புறச் சான்றுகள் காணப்படுகின்றன. அவற்றை அணுகி ஆயும்போது அங்கு வசித்த மக்கள் நாகரீகமானவர்கள் என்பதற்கு ஐயமில்லை.

அந்தக் கிராமத்து வயது முதிர்ந்தோரிடையே, கர்ண பரம்பரையாக வந்த சில கதைகள் உள்ளன.

‘‘பழையகாலத்திலை இஞ்சை நாகர்கள் குடியிருந்தனர். அதனாலைதான் நாகர் கோவிலெண்டும், நாகர் தம்பிரான் கோயில் என்றும் பேர் வந்தது’’ ஐரோப்பாக்காரன்கள் இஞ்சை வந்து எங்கடை செல்வம் எல்லாத்தையும் கொள்ளையடிச்சிட்டாங்கள், கடவுளையும் எங்களையும் கொண்டு போவ நாகராசா வீடேல்லை’’

இவற்றை நினைத்துப் பார்க்க உண்மையாகவே தெரிகின்றது. இன்றோ இவை யாவும் வரலாற்றுருவம் பெற்ற அல்லது பாட்டி சொல்லும் கதைகள்

வடமராட்சியில் உள்ள ஏனைக் கிராமங்களுடன் நோக்கும்போது, இது மிக மிகப் பின்தங்கியது.

அந்தக் கிராமமே இன்னும் கண்டிருக்காத ஒரு மாநாடு இன்று அங்கே நடைபெறுகின்றது, அதை அங்குள்ள தொழிலாள விவசாயிகள் கூட்டுகின்றனர்.

பார்வையாளரிடையே பரபரப்பு ஓய்ந்து அமைதி குடிகொண்டது.

கந்தசாமி புதிய புதிய விவகாரங்களையெல்லாம் மக்கள் அபிலாசைகளை உள்ளடக்கி ஆழமாகவும், ஆவேசமாகவும் எடுத்துக் கூறினான். அவனது தோற்றம் திடமானஅவனது மனப்போராட்டங்களை காட்டியது. வார்த்தைகள் காட்டுக்கனியையும், தேனையும் விட அவர்களுக்குச் சுவைத்தது. சிலருக்குத் தத்துவங்கள் புரியாவிடினும் கூட, ஏழ்மையைத் துரத்தியடித்துப் புது வாழ்வைக் காட்டி நிற்பது போலப் பலருக்கும் தெரிந்தன. நிகழ்ச்சிகள் முடிவடைய சற்று நேரம் இருந்தது.

அருகேயுள்ள சாலையோரத்திலிருந்து காரொன்று சாலையின் மத்தியை நோக்கி நகர்ந்து வந்தது.

உள்ளே சாரதிக்கு அருகே குமாரவேலு இருந்தார். அவருடைய நெற்றியில் காணப்பட்ட நாமப் பொட்டு, ஞாயிற்றுக் கிழமையாதலால், அங்குள்ள நாகர்தம்பிரான் ஆலயத்திற்கு வழமையாக வந்து போவதை உணர்த்தியது.

குமாரவேலு ஏதோ தாக்குப் பிடித்தவர் போலக் காணப்பட்டார். வாய்க்கு வந்தபடியெல்லாம் அவர்:

‘‘கூலிப் பசங்களுக்கு புத்தி கொழுத்திட்டுது. ஊர்வாரி கணபதியான்ரை மேன் கந்தசாமி இவனுகளை நல்லா பேப்பட்டம் கட்டிறான்.’’

சாரதி- மணியன் கேட்டும் கேட்காதவன்போலக் காரை யோட்டிக்கொண்டிருந்தான்.

ஓரக்கண்ணால் அவர் மீண்டும் அவனை விளித்துப் பார்த்தவாறே ''மணியா... உன்ரை வயதிலை யெண்டால் உவனுவளை மேடை யிலை போட்டு மிதி மிதி..."

—சொல்லி முடிப்பதற்கிடையில், எதிரே வேகமாக வந்த பைசிக்கிளொன்று, அவர்கள் காரை வேண்டுமென்றே மிரட்டிப் போகும்படியாக விலகிக் கொண்டது.

கூறியதை மறந்தே மீண்டும் ''திமிர்போலை"

''தங்கடை புரட்சி எரிமலையாய் குமுறுமாம், நாலு எழுத்துப் படிக்கேல்லை அதுக்கிடையிலை... பெரிய மனுசன்கள்போல, மானம் வெக்கம் தெரியாத நாயள். கண்ட நிண்ட எளியன் சாதியளோடை கூட்டுப் பிடிக்கினம்''

''வரட்சிவெள்ள பாதுகாப்பு நடவடிக்கை, பழைய குளங்களை மீப்பது, கண்ணாடித் தொழிற்சாலைக் காணிக்காரருக்கு எதிர் போராட்டம், உத்திரவாத விலைத் திட்டம்''

''-இவையளெல்லாம் என்ன மணியகாரன் பரம்பரேலை வந்தவையோ"

குமாரவேலு அந்தத் தொழிலாள- விவசாயிகள் மாநாட்டு உரை பற்றி இழிவாக அலட்டிக் கொண்டிருந்தார். அவருடைய இந்த வீண் வார்த்தைகளுக்கெல்லாம் மணியன் தாளம் போடவில்லை. பதிலாக பெருமிதத்தோடு தன்னுள் சிரிக்கின்றான். அவன் எண்ணத் திவலைகள் அவரை மையமாக்கியே வட்டமிட்டுக்கொண்டன.

''நாலு வேளைக்குப் பிழைப்பில்லையெண்டால் நாயள் மாதிரி அலையிறவங்கள்''

''—லேற்றாப் போனதுக்கு என்னை இவன் இப்பிடித்தான் கேலி பண்ணினான். இத்தனை காலமும் இந்தச்சம்பளத்தோடை உழைக்கிறன், ஆனாலும்... அவன் வீட்டு நாயை மதிக்கிற அளவுக்கு என்னை மதியானாம். எனக்கு முன்னே கிராமத்தாங்களுக்குச் செய்த தில்லுமுல்லுக்கு கிடைச்சது காணாதெண்டு பேந்தும் முட்டுறான்...''

மணியனுக்கு ஒரு நாளைக்காவது நியாயத்துக்காக அவரை எதிர்த்துப் பேசவேண்டுமென்ற ஆவல் எழும். ஆனால் தலைமுறை தலைமுறையாக வந்த அடிமைத்தனம் அதைத் தடுத்துவிடும்.

எதிர்த்துப் பேசியதற்காக ஒருதடவை கதிர்காமு பொலிஸில் வாங்கிய உதையை அவன் நேரில் கண்டிருக்கிறான். பொலிஸார் எப்போதும் குமாரவேலுவிடமே நியாயமிருப்பதாக எண்ணுவதை அவன் நன்கு அறிவான்.

தாழ்மை உணர்வம், பயமுமென்ற இந்த மனப் பிராந்திகள் தனக்காகவே சிருஷ்டித்திருப்பது போல அவனுக்குத் தோன்றியது. அவன் சமூகம் அவனை விடப் பலம் வாய்ந்தது. கந்தசாமி போன்ற மனிதர்கள் கூட தம் கொள்கையை வலியுறுத்த முடியாத நகரம் அது.

கிராமத்து மக்களது வக்கரிப்புக்களையும், அபிலாசைகளையும் பார்க்கும்போது, அவனுள் ஒரு பற்றுப் போராட்டம் வளர்ந்தது. இயற்கைக்கு எதிரான வர்க்க முரண்பாடுகளைத் திருத்திக் கொண்டால், மக்களது அபிலாசைகள் தானே நிறைவு பெற்றுவிடுமென்ற உறுதிப்பாட்டை அவன் கிராமத்திலேயே கற்றுக் கொண்டான்.

கந்தசாமி மாநாட்டில் கூறியதுபோல;

''ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பிரவர்த்தனங்களில் நம்பிக்கை கொள்ளவேண்டும். தங்தள் எதிரிகள் யார் யார் என்பதையும் அறிந்து வைத்திருக்க வேண்டும்"


இனிமையிலும்
இனிமையானது
தரத்தில் சிறந்தது
மக்கள் விரும்புவது
எங்கும் கிடைப்பது

அண்ணா
கோப்பி


அண்ணா இண்டஸ்ரி
— இணுவில் —

நோயற்ற வாழ்வே
குறைவற்ற செல்வம்

மக்கள் ஆரோக்கியத்திற்கும்
நுளம்புகளை அகற்றவும்
ஒரே வழி

நீம் சுகாகாதார தூபம்

தயாரிப்பாளர்:
மில்க்வைற் சோப் தொழிற்சாலை
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.



மாப்பிளை; மாமா உத்தியோகத்திற்குப் போக பஞ்சியாயிருக்கு...

மாமன்: ! ! !

மாப்பிளை; எஞ்சினியர் உத்தியோகத்தை ரிசைன் பண்ணிவிட்டு நீங்கள் தந்த சீதனத்தை வைத்து ஒரு வட்டிக் கடைபோடலாமெனப் பார்க்கிறேன்.

— இவற்றையெல்லாம் மணியன் எண்ணியதும் தனது அதைரியத்திற்காகத் தன்னைக் குறைகூறினான்.

முன்னைய— பூதாகரமான நிகழ்ச்சிகளெல்லாம் அவன் எண்ணங்களை உலுக்கின.

ஓர் பக்கமாகத் திரும்பிப் பார்த்தபோது, நீண்ட பெருமூச்சோடு, குமாரவேலு பின்புறமாகச் சார்ந்தவாறே உறங்கிக் கொண்டிருந்தார்.

''என்ரை உயிர் போனாலும் போவட்டும் உன்னை உன் கடபுடகாரோடை இடிச்சு நொருக்கோணும்''

— அப்படியெல்லாம் மணியன் கறுவுகின்றான். ஆனால்...

o o o

விளைநில உணவுப் பொருட்களை கொள்முதல் செய்து தலைநகருக்கு ஏற்றுமதி செய்து வரும் குட்டி முதலாளிகளில் குமாரவேலுவும் ஒருவர். பருத்தித்துறை இவரது சொந்த இடம்.

ஆலயத்திற்காக அடிக்கடி வரத்தொடங்கிய நாட்களில் இருந்து, கிராமத்து செல்வாக்கான மக்களிடையே அவருக்கு நட்பு ஏற்பட வாய்ப்பானது.

அப்படியே... சிறு சிறு விவசாயிகளையும் சந்தித்து, அவர்களது பயிர்ச்செய்கைப் பொருட்களையும் மலிவில் பெற முனைந்தார்.

— அன்றெல்லாம்

அந்தக் கிராமத்தையும், அங்குள்ள மக்களையும் பார்க்கும் எவன் உள்ளமும் பரிதாபமடைந்துவிடும்.

குமாரவேலு எல்லாம் அதைக் கண்டு இரங்கக்கூடியவரல்ல. பலே பேர்வழி. பயங்கரமான கொலை, சதி வழக்குகளில் சம்பந்தப்பட்டுத் தப்பிக்கொண்டவர். இவ்வாறு இருப்பினும் இரக்கப்படுபவர் போலத் தன்னைக் காட்டிக்கொண்டார். அப்படியே கிராமத்து வழி புலப்படாத அப்பாவி மக்களோடு இரண்டறக் கலந்துகொண்டார்.

மக்களில் அநேகமானோர் வேளாள இனத்தைச் சேர்ந்த விவசாயிகள். பாரம்பரியமாகவே நெல் வேளாண்மையிலேயே அதிக சிரத்தை காட்டினார்கள். அதையே தம் முக்கிய தொழிலாக எண்ணினார்கள்.

வருவாய், நிரந்தரமும், போதாமையுமற்றபடியால், இத்தொழிலில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. விட;

கிளிநொச்சி போன்ற குடியேற்றத் திட்டங்களின் வளர்ச்சியோ என்னவோ, சிறு நிலம் படைத்த விவசாயிகள் தங்கள் வயல் நிலங்களில் சிறு அளவில் உப- உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய விரும்பினார்கள்.

நெல் அறுவடைக் காலங்களில் கரச்சிப் பக்கங்களில் கூலி வேலை செய்து பெற்ற நெல் ஒரு சிலரது விதை நெல் தேவையையும், உணவுத் தேவையையும் பூர்த்தி செய்தது.

சில சமயங்களில் வரட்சியோ அல்லது வெள்ளப் பெருக்கோ ஏற்பட்டுவிட்டால், அவையாவும் நாசமாகப் போய்விடும்.

ஆடுமாடுகளுக்கேனும்உணவு கிடைப்பது அரிது. மேய்ச்சல் நிலங்கள் வெறும் சம்புத்தரையாகவே இருக்கும். காட்டு மேய்ச்சலுக்குமிருகங்களினதும். அன்னியரினதும் பயமிருந்தது.

அவர்களது வருமானம் போதாமையைக் கண்டு அங்கு வண்ணார், அம்பட்டர்கூட வசிப்பதில்லை. தெரியாமல் வந்து குடியேறியவர்களும் இரண்டொரு மாதத்தால் ஊருக்குப் பறந்து விடுவார்கள்.

வயல் நிலங்களின் பெரும் பகுதி பழைய தலைமுறையில் வந்த உடையார், விதானையார் பரம்பரைக்கே உரியது. கற்றோர், உபாத்திமார், கோவில் பரிபாலகர்கள், அந்த இந்தச் சங்கங்களின் நிருவாகத்தினர்கள் யாவரும் இதே குடும்பத்திலேயே இருந்தனர்.

அங்கு நிலமற்ற விவசாயிகள் மாத்திரமன்று, சிறு நிலம்



ரவி: என்னுடைய நண்பர் ஒருவர் தற்கொலை செய்திட்டார்...
கணேஷ்: ஏன்?
ரவி; மனிதனை மனிதன் கொல்லுறான் என்ற கவலையில் தன்னைக் கொன்றிட்டார்.

- ஜோக்கிரட்டீஸ் -

படைத்த விவசாயிகள் கூட மிக ஏழைகள்.

ஒரு 'சிலேற்' வாங்கிக் கொள்ள வசதியற்ற— அதற்காகப் பாடசாலைக்குச் செல்லப் பயந்த சிறுவர்கள், இச்சைகளாலும், இன்பங்களாலும் துரோகிக்கப்பட்ட திருமண வயது கடந்துபோன அவர்கள் கன்னியர்கள்;

—இத்தனை துயரப்பளுக்களை சுமக்கும் அந்த மக்கள் தளராத உள்ளமுடையவர்கள். தெய்வ நம்பிக்கை நிறைந்தவர்கள். தங்கள் வாழ்விற்காக அவர்கள் கொலை, களவு எதையுமே செய்ய நினைப்பதில்லை.


தங்கள் இரத்தத்தில் வந்த உடையார், விதானைமார் பரம்பரையினரே வெட்கமடையும் படியாக அவர்கள், தங்கள் ஒரு வேளைப் பசியைப் போக்கிக் கொள்வதற்காக வடக்கேயுள்ள கடலோரம் சென்று, மீனவ நண்பர்களிடம் எப்படியோ மீனை இலவசமாகப் பெற்றுவந்துவிடுகிறூர்கள். அப்படியே... அந்தப் பொழுது போகும்.

அங்குள்ள பணக்காரர்கள் அவர்களை இழிசனராகவும், நாகரீகம் தெரியாதவர்களாகவும் கூறிக்கொண்டு, தங்கள் பிள்ளைகளின் திருமண உறவுகளைத் தங்களுக்குள்ளேயோ, அல்லது வெளியூர்களிலோ ஏற்படுத்திக்கொள்ளுகின்றனர்.

இத்தகைய அதிகார - அந்தஸ்துப் பிரவர்த்திகளே, குமாரவேலு அந்தக் கிராமத்துச் செல்லப்பா குடும்பத்துடன் சம்பந்தியாக வரமுடிந்தமைக்குக் காரணங்களும் கூட.

சம்பந்திகள்மூலதனம் அன்று அந்தக் கிராமத்தைத் தலைகீழாக மாற்றியது.

பரம்பரை பரம்பரையாக வாரத்திற்குக் கொடுக்கப்பட்டு வந்த தனது நிலங்களைச் செல்லப்பா சம்பந்தியின் உதவியோடு மீட்க முனைந்தார். ஆரம்பத்தில் இதற்கு ஏழை விவசாயிகளின் எதிர்ப்புக்கள் இருந்தாலும்



பெண்ணின் தந்தை;

மாப்பிளையைக் காணன், கல்யாண எழுத்திற்கு நேரமாச்சு!

கல்யாணத் தரகர்:

அவருக்கு கை நடுக்கம்... தவறணைக்குப் போட்டார் வ்ந்திடுவர்.

- அதிமதுரம் -

பொலிஸார் தலையிட்ட பின், அவரே வென்றுகொண்டார்.

அந்தக் கிராமத்து மக்களுக்கு அதற்காக ஏதேதோ புத்திமதிகள் சொல்லப்பட்டன. அவர்கள் அதை முற்று நம்பிக்கொண்டனர்.

o o o

மணியன் ஓட்டிக்கொண்டிருக்கும் கார் கடற்கரைக்குச் செல்லும் குறுக்குச் சாலையை அண்மித்தது.

கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரசாங்க ஊழியரது ஒத்துழைப்புடன் செல்லப்பாவினுடைய வயல் நிலத்தில் கிராமத்து விவசாயிகளால் புணருத்தாரணம் செய்யப்பட்ட அந்த குளங்குட்டைகளை அவன் பார்க்கின்றான்.

அவன் முன்னிலையில்—

''ஐயா... அமானி வேலையெண்டு கூப்பிட்டிட்டு உழைச்ச முப்பே ரூபாவிலை கூட என்ரை தருமப் பணத்தைக் கழிக்கிறியளே ...அவர் போய் ஆறு வருசமாவுது, என் பிள்ளையளுக்கு ஒரு சாண் துணி எடுத்துத் தருவாரில்லை. என்ரை உழைப்பிலைகூட நீங்கள்...''


—கண்ணீர் துளும்ப கேவிக் கேவி அழுத அந்த விதவைப் பெண்ணின், அன்றெலித்த குரல் இன்று அவன் காதில் இடியோடும்... மின்னலோடும் கேட்பது போல இருந்தது.

''சீ... தங்கள் வருமானங்களுக்காக வெறும் காய்ந்த பாணையும், சாயம் போட்ட தண்ணியையும் கொடுத்து அதிகாலையிலிருந்து மாலைவரை எத்தனை எத்தனை ஏழைத் தொழிலாளர்களை இவங்கள் ஏமாத்திருங்கள்''

மணியன் தன்னுள்ளே வெதும்பிக்கொண்டான். அந்த நேரங்களிலெல்லாம அவர்களது துன்மார்க்க வாழ்வில் அவனுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. இன்று அது......

அன்று —

பழைய விவசாய முறைகள்



★ ஷேக்ஸ்பியர் இன்று உயிரோடிருந்தால் உலகமே வியக்கும் அபூர்வ மனிதராக இருப்பார்...

● ஆம்...மிகவும் உண்மை; அவருக்கு 300வயதுக்கு மேலாகுமல்லவா?

பழைய விவசாய முறைகள் நிராகரிக்கப்பட்டு புதிய விஞ்ஞான ரீதியிலான முறைகள் சம்பந்திகளால் அறிமுகப்படுத்தப்பட்டன.

நீரிறைக்கும் யந்திரங்களினதும் உழவு யந்திரங்களினதும் இரைச்சல் இரவுபகலாக கிராமத்தை அதிரவைத்தன.

வேண்டியவர்களுக்கெல்லாம் செல்வம் புரண்டது. எல்லாமே முன்னேற்றமானது. ஆயினும்.... ஏழைகள் இருண்ட குகையினூடாக விடிவெள்ளியையே நோக்கிக்கொண்டிருந்தார்கள்.



ஒரு தமிழ்ப் பத்திரிகை ஆரம்பிப்பதற்கு ஒரு பெயர் சொல்லு பார்க்கலாம்.

இலவசம்—

சிலர்... ஓரிரு ரூபாக்கள் சம்பாதிப்பதுகூட தெய்வம் தந்த வாழ்வேயெனக் கூறிக்கொண்டனர். ஏதோ... ஒருவேளைக்கு கஞ்சியையாவது குடித்தனர்.

யாரையும் குறை கூறிக்கொள்ளும் மனத்தைரியம் அவர்களுக்கு வரவில்லை. ஆயினும் யார் யார தங்களுக்கு எதிரியென்பது அவர்களுக்கு புலப்படத் தொடங்கியது.

பழைய இயற்கைப் பொருளாதார நிலைகளுக்கும், அதன் புதிய மாற்றங்களுக்குமிடையே ஏழை விவசாயிகளதும் தொழிலாளர்களதும் தேவைகள், உழைப்புக்கள் வெறும் கொட்டாவி விட்டுக்கெண்டிருந்தன.

(4)

குமாரவேலுவின் தூக்கம் கலைந்தது. சாலை ஓரத்தேயுள்ள கடைவாயிலுக்கு நேரே அவர், காரை நிறுத்தச்சொன்னதுவும் அதிலிருந்து இறங்கிக்கொண்டார்.

மணியன் முன்னந்தலையை ஸ்ரேறிங்கில் சார்த்திக்கொண்டே எதையோ நோக்கிக்கொண்டிருந்தான்.

அவன் குமாரவேலுவுக்குச் சேவைசெய்யவந்து ஐந்துஆண்டுகளாகிவிட்டன. குமாரவேலுவுக்கு கிராமத்தில் ஏற்பட்ட சிநேகத்தைப்போலவே அவனுக்கும் ஏற்பட்டிருந்தது.

ஆனால் அதில் சில வேறுபாடுகள்—

அவரவர் இயல்புக்கும் தராதரங்களுக்கும் ஏற்கவே இருந்தது.

காரின் முகப்புக் கண்ணாடிக்கு ஊடாக வந்துகொண்டிருக்கும் செவ்வானத்தின் மங்கிய ஒளி அவனது முகத்தைத் தொட்டுப் படர்கின்றது.

மெல்லிய சோழகக் காற்று வீசிக்கொண்டிருக்கின்றது.

குமாரவேலு வந்து காரில்ஏறிக்கொண்டதும் கார் புறப்பட்டது.

சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டே மணியனைத் திரும்பிப் பார்த்தபின் அவர்;

''மணியா...! வரேக்கைபொன்னுத்துரையன்தானே சைக்கிளாலை காருக்கு இடிக்க வந்தவன்"

மணியன் மௌனமாக இருந்துவிட்டுப் பின்...,

'ஓம்', என்றான்.

'முந்தியும் இந்த நாவல்காட்டாங்கள் இப்பிடி இடங்கண்டவங்கள். இவனை தனிய வைச்சுக் கேட்காட்டால் சேட்டை கூடிவிடும்.'

மணியன் பதில் கூறவில்லை. காரை கவனித்து ஓட்டுபவன் போல இருந்தான்.


அவன் மனக்கண்ணில் இரண்டு வருடங்களுக்கு முன் நடந்த-

குமாரவேலு குத்திக்காட்டிய நிகழ்ச்சி முகிழ்ந்தது.

தான் ஓடிவந்துகொண்டிருந்த காரை கந்தசாமி மறித்ததும், அவனது தோளில் சின்னத்துரை மயக்கத்துடன் காணப்பட்டதும் பல விவசாய-தொழிலாள மக்கள் அவர்களுக்குப் பக்கத்தில் கவலை தோய்ந்த முகத்தோடு கண்ணீர் சிந்திக்கொண்டிருந்ததும், ஒன்றும்விடாமல் அப்படியே அவனுக்கு ஞாபகமானது.

மூன்று ஆண்டுகள் வரையாக சின்னத்துரையை அவனுக்குத் தெரியும். பலமுறை அவனிடம் விலைகொடுத்துத் தேங்காய் பெற்றிருக்கின்றான்.

அப்போதெல்லாம் சின்னத்துரை கூறும் தன் வாழ்க்கைச் சரிதங்களையும் அதன் ஓலங்களையும் அவன் ஆறியமரந்து கேட்பான்.



என்னுடைய மருமகனுக்கு சிகரட் ஊதி இதயம் நன்றாகக் கனிந்து போச்சு... கொடுத்த சீதனம்எல்லாவற்றையும் நண்பர்களுக்குத் தர்மம் செய்திட்டார்...

என்னுடைய மருமகனுக்கு வெள்ளைச்சாராயம் குடித்து மனம் வெள்ளை மனமாப் போச்சு... குடும்ப இரகசியமெல்லாவற்றையும் சந்தியில் சொல்லி விடுவார்.

சின்னத்துரை தனதுசிறுதோட்டத்திலேயே துரவிலிருந்து கைப் பட்டையால் நீரிறைத்துத்தோட்டம் செய்து வருபவன்.

அன்று...

பயிருக்கு மருந்து தெளிக்கும் போதே அவனுக்கு திடீர் மயக்கம் ஏற்பட்டது.

அவன் மகன் போட்ட கூச்சலுக்கு பக்கத்து தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்த தொழிலாள விவசாயிகள் பலரும் ஓடிவந்து அவனை காப்பாற்ற முனைந்தனர்.

ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வதற்காக கந்தசாமி அவனைத் தோளில் சுமந்தவாறு வரம்பு வழியே பெருஞ்சாலைக்கு கொண்டுவந்தார்.

அப்போதே அவர்களுடைய காரும் வந்துகொண்டிருந்தது, காரின் உள்ளே குமாரவேலுவும் மணியனும் இருந்தனர்.

காரை ஆறுமுகம் மறித்த போது, மணியன் அதை நிறுத்தலானான்,

கந்தசாமி:

''ஐயா...... சின்னத்துரைக்கு மருந்தடிக்கேக்கை மயக்கம் வந்தது. ஆஸ்பத்திரிக்கு கொஞ்ச நேரத்திலை கொண்டு போவாட்டி கஷ்டம். எப்பிடியாவது...கொஞ்சம் உதவுங்கோ...''

—தனது முதலாளியிடம்கெஞ்சிக் கேட்டான்.

மூஞ்சையை அறைந்தார் போல அவர், இந்தக்காரிலைவாறதுக்கு உவனுக்கென்ன அந்தஸ்து ஊத்தையனையும்கட்டிக்கொண்டு பார். ஆற்ரேம் வண்டிலிலே போங்கோடா".

கந்தசாமி குமாரவேலுவைப் பரிதாபத்தோடு பார்த்தான் அவன் கண்களில் நீர் பனித்தது. அவை சிவந்துகொண்டன.

ஆனல் அதற்கிடையில்—

ஆறுமுகம் ஆக்கிரோசத்துடன் காரின் கதவை எட்டி உதைந்தான். அவனை மற்றவங்களால் தடுத்துக்கொள்ள முடியவில்லை ஒவ்வொருவரது மனோபாவங்களும் அப்படியே இருந்தன.

கார் கொந்தளிப்பில் சிக்குண்டது.

சின்னத்துரையின் மரணஓலம் அதிகரித்துக்கொண்டு போனது. அவன் வளர்த்தப்பட்ட இடத்தில், வெடியுண்ட காட்டுமிருகம் போலத் துடிதுடித்தான். வாயிலிருந்து வெண்நுரை கக்கியது. கண்கள் பார்வையிழந்துஇருண்டு கொண்டு வந்தன. இறந்து கொண்டே இருந்தான்.

அவன் மகனின்பிலாக்கணம்அவர்கள் உள்ளத்தை சாருக்கி விட்டது.

அவர்கள் எல்லோரும் சின்னத்துரையை சூழ்ந்து கொண்டனர் சிலர் கண்ணீர் வடித்தனர்.

மணியன் காரிலிருந்து இறங்கிவரப் பயந்து எட்டிப் பார்த்தவாறே,

ஐயா...இந்த நேரத்தில் உதவேல்லையெண்டால்—...?

—குமாரவேலுவைக் கெஞ்சிக் கேட்டான்.

தனியத் தோட்டம் செய்யிறுன். அண்டைக்கு மிளகாய் கேட்க தரமாட்டனெண்டவனுக்கு நானேன் உதவவேணும்.

—இப்படி கோபாவேசத்துடன் கூறிக்கொண்டே,

''எடடா காரை'' என்றபடி அவன் கன்னத்தில் அறைந்தார்.

மணியன் ஆத்திரம் பொங்கிவர காரை ஓட்டிக் கொண்டான்.

'நீயும் உன் சம்பந்தியும் நாளைக்குவந்து பாரடா உன் தோட்டத்தை'

என்ற ஏச்சுக்களும், அந்த நிகழ்ச்சிக்குப் பின்னர், மக்கள் அவர்களது தோட்டத்துக்கு போகமையும், வேற்று ஊரிலி

# இது
## சரியல்ல...

★ பஸ்ஸின் மிதிபலகையில் நின்றுகொண்டு பிரயாணிகளை ஏறவிடாமலும் இறங்க விடாமலும் இடத்தை அடைத்துக்கொண்டு நிற்பது சரியல்ல.

● ●

★ படம் நடந்துகொண்டிருக்கும்போது பெண்களைத் திரும்பித் திரும்பிப் பார்ப்பது சரியல்ல.

● ●

★ இரவல் படிக்க வாங்கிய புத்தகத்தை அடையாளப் பக்கத்துக்காக மடிப்பதும், கண்ட கண்ட வரிகளை எழுதுவதும், கீழ்க் கோடு இழுப்பதும் சரியல்ல.

● ●

★ இடைவேளை தொடங்கும் வரை வெளியில் அரட்டை அடித்துவிட்டு இருட்டில் தட்டுத்தடுமாறி இடந் தேடி உட்காருவது சரியல்ல.

மு. சுகுமார்
—அளவெட்டி

**உங்களுக்கு எவை எவையெல்லாம் சரியல்ல என்று படுகின்றனவோ அவற்றையெல்லாம் எழுதி அனுப்புங்கள் தொடர்ந்து பிரசுரிப்போம்**

-- ஆசிரியர்

ருந்து வேலைசெய்யவந்த தொழிலாளர்களை நிலைமையைச்சொல்லி விரட்டியதும் அவனுக்கு ஞாபகத்துக்கு வந்தன.

மணியன் இப்போது குமாரவேலுவின் முகத்தைப் பார்க்கிறான்.

கிராமத்தவர்கள் காருக்கு உதைத்தபோதுகூட ஏற்பட்டிருக்காத ஆயாசமும், பழிவாங்கலும் அவர் முகதத்தில்நிர்மலமாகத் தெரிந்தது.

அவனுக்கு பயங்கரமாக இருந்தது.

அன்று தான் அடிவாங்கியகன்னத்தை தடவியவாறே, பொன்னுத்துரையைப்பற்றி குமாரவேலு திரும்பத் திரும்பக் கேட்பதை நினைத்தான்.

கார் திருத்திக் கட்டப்பட்டிருக்கும் சிறு பாலத்தில் இப்போது மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்தது.

முன்பெல்லாம் தலைகுனிந்து கும்பிடுபோட்ட அந்த தொழிலாள விவசாயிகள் இன்று குமாரவேலுவைக் கண்டும் ...... காணாதவர்கள்போலவே தமது தோட்டத்தில் வேலையில் ஈடு பட்டுக் கொண்டிருந்தனர்.

குமாரவேலு அதைப் பார்க்க விரும் பாதவர் போலகீழே குனிந்தபடி இருந்தார்.

அப்போது அந்தத் தொழிலாளர்களது நாட்டுப் பாடலிசை தெளிவாகக் கேட்டது. அந்தப் பாடல்களில் அவர்களுடைய வக்கரிப்புக்களும் எதிர்கால நம்பிக்கைகளும் தீட்சண்யம் பெற்றிருப்பதனை அவன் கேட்கின்றான்.

அவை அவன் இதயத்தைத் தொட்டுப் படர்ந்தன.

தொழிலாள — விவசாயிகளின் ஸ்தாபன ரீதியான கூட்டுறவில் எத்தனை புதிய திட்டங்கள்-புதிய கருவிகள்- புதிய முறைகள் படித்த பணக்கார குமாரவேலுவை அவர்கள் தூக்கி எறிந்து விட்டார்கள்,

காடும் தரிசு நிலங்களுமாகக் கிடந்த அந்த இடம் இன்று பொன் கொழிக்கும் பூமியாக வளர ஆரம்பித்தது.

இன்று அந்தக் கிராமமும் வளர்கின்றது, பழமைகள் மரணித்து விட்டன. ஒரு புதிய யுகத்தை - புதிய சனநாயகத்தை கட்டியமைக்கும் அரிய பணிக்காக ஒவ்வொரு மக்களும் ஊக்கமாகவே உழைக்கின்றனர். அவர்கள் இப்போது திடசாலிகள்.

'இந்த மக்களின்ரை கூட்டுறவிலை சேர்ந்து கொள்ளொணும். அதுக்கிடையிலை இவன்ரை வேலையை இவனெட்டைக் குடுத்திட்டு பொன்னுத்துரையைக் காப்பாத்த வேணும்,"

இந்த எண்ணங்களோடேயெல்லாம் அந்தக் கிராமத்திலிருந்து தன் நகர்த்துக்குஎடுத்துச்செல்கின்றான்.

அந்தக்கார் கங்குகரையின்றிப் பறக்கின்றது.



எல்லாரும் நீட்டிநிமிர்ந்துபடுத்திருக்கிறாங்கள் ஒருதரும் இருக்க இடம் தாறாங்களில்லை,

இந்த ரயிலுக்கு ''கும்பகர்ணன் எக்ஸ்பிறஸ்'' பெயரிட்டால் நல்லது,

—அதிமதுரம்

ஸ்ரீ நாராயணகுரு பிரயாணம் செய்த புகைவண்டி திருவனந்தபுரம் புகையிரத நிலையத்தில் நின்றது. அந்தப் பெட்டிக்குள் ஏறினார் அந்த சமஸ்தானத்து மன்னர். ஏறிய மன்னர் குருவின் முன்னே அமர்ந்தார்,

நீங்கள் என்ன சாதி என்று கேட்டார் மன்னர்.

பாரத்து தெரிந்து கொள்ளுங்கள் என்றார் குரு.

பார்த்து தெரிந்து கொள்ள முடியாதே சாதியை என்று சொன்னார் மன்னர்.

பார்த்து தெரிந்து கொள்ள முடியாத விசயத்தைப் பிரமாதப் படுத்துவது நல்லதல்ல என்றார் குரு.

→ குண்டூசியும், தலைக்கனமுள்ளவனும் நீண்ட தூரம் போகமுடியாது. தலை தடை செய்யும்.

நாவலாசிரியர்:
...இறுதியாக எந்தப் பத்திரிகையும் நிராகரிக்காது ஏற்றுக் கொள்ளுமளவிற்கு ஒன்றை எழுதிமுடித்து விட்டேன்.

மற்றவர்:
''சந்தோசம்... என்ன அது.

நாவலாசிரியர்:
ஆயுள் சந்தா வுக்கான ''செக்" ஒன்று.

# ஏற்றுமதியாகிறார்கள் மாப்பிள்ளைகள்

— ஈழமாறன் —

இந்தத் தலைப்பைப் பார்த்ததும் முற்பிறப்பில் பாவம் செய்ததால் இப்பிறப்பில் பெண்களைப் பெற்றெடுத்த தமிழ் தந்தைமார்கள் சிரித்திரன் அலுவலகத்துக்கு படையெடுத்துச் சென்று ஆசிரியர்களுக்கு தொல்லை கொடுக்க வேண்டாமென தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

காரணம்! அப்படி ஏற்றுமதியாகின்றவர்களின் பட்டியல் எதுவும் ஆசிரியரிடம் இல்லை. இம்முறை நல்லூர்கந்தன் திருவிழாவின்போது நான்கு ஐந்து வாலிபர்கள் ஒன்றாக நின்று கதைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அதை சற்று உற்று கவனித்தால், அது பல்வேறு கதைகளைவிட முக்கியமாக வெளி நாட்டுக்குப் போவதுபற்றிய கதையாகத்தான் இருக்கும் என்ற உண்மையை பலர் உணர்ந்திருப்பார்கள். 'படத்திற்குப் போகவில்லையா' என்று கேட்பதைப்போல், 'மைச்சான், நீ வெளியிலை போகர்றை (முயற்சி) பண்ணயில்லையோ' என்று கேட்பதும் சர்வ சாதாரணமாகி விட்டது.


திருவிழாவின்போது ஒரு சில வாலிபர்கள் இரண்டு மூன்று வருடங்கள் வெளிநாடுகளில் இருந்துவிட்டு விடுமுறையில் வந்திருந்தார்கள் அவர்களைச்சுற்றி பெரிய கூட்டம் இருக்கும். வெளிநாட்டில் அவர்கள் செய்கின்ற வேலைகள் சம்பளங்கள் பற்றியெல்லாம் பேச இருப்பவர்கள் மிக ஆவலுடன் விசாரிப்பார்கள் அவர்கள் பெரிசாக ஏதாவது சொல்லி வைப்பார்கள்; திர விசாரித்ததில் வழக்கமான கோப்பை கழுவும் வேலையுடன் இப்போது அலுவலகங்கள் கூட்டி துப்பரவு செய்தல் படங்களுக்கு நோட்டீஸ் ஒட்டுதல், ஹோட்டல்களில் சர்வர் வேலை போன்ற பல வேலைகளையும் நமது மாப்பிள்ளைகள் செய்வதாக அறிய முடிந்தது. ஒரு சிலர் இந்த உண்மைகளை ஒத்துக் கொள்வதுண்டு. சிலருக்கு உண்மையிலேயே அதிர்ஷடவசமாக நல்ல வேலைகள்கிடைப்பதுமுண்டு இப்படியான தொழில்களைச் செய்வது மரியாதைக்கு றைவு என்பதல்ல எமது எண்ணம். இங்கு ஜீ. சி. ஈ. படித்துவிட்டால் மண்வெட்டி தூக்க மறுக்கும் நமது மாப்பிள்ளைகள் அங்கு போய் எந்த வேலையும் செய்யத் தயாராயிருக்கும்போது வேதனையாயிருக்கின்றது.

இன்றைய இளைஞர்கள்மனதில் எப்படியாவது வெளியில் போய் விடவேண்டும் என்ற எண்ணம் வேரூன்றி வருகிறது. இதற்கு வெளிநாட்டு மோகம் காரணமல்ல. உயர்கல்வித் துறையில் அவர்களுக்குக் கிடைக்கின்ற ஏமாற்றமும் ஒரு காரணம். இந்த வளர்ந்துவரும் ஆசையினால் ஏற்பட்ட சில சுவையான நெருக்கடிகளை வாசகர்களுக்கு தொகுத்து தர விரும்புகிறேன்.

இப்பொழுதெல்லாம் பிரித்தானிய தூதுவராலயத்தில சன நடமாட்டம் அதிகமாக உள்ளதாம். 'விசா'வுக்கு விண்ணப்பிப்போர் தொகை அதிகரித்துவிட்டதால் ஆஸ்பத்திரிகளில் கொடுப்பதுபோல் இப்பொழுது அங்கு இலக்கத்துண்டுகள் வரிசையில் விட்டு கொடுக்கப்படுகிறதாம். குறிப்பிட்ட இலக்கங்களுக்குநாட்கள் குறிக்கப்பட்டு அந்தந்த நாட்களில் வரும்படி கூறப்படுகிறது. அப்படி போய்விட்டால் மட்டும் விசா கிடைத்துவிடுமென்பதல்ல ஆங்கிலந் தெரியாத, அல்லது அவர்களின் ஆங்கிலம் விளங்காத இளைஞர்கள் பலருக்கு நீர் அடுத்த வருடம் முயற்சி செய்யும அல்லது நன்றாக ஆங்கிலம் படித்துவிட்டு வாரும என்ற பதில்களும் கிடைக்கின்றனவாம். பாஸ்போட் அலுவலகம் தீர்த்தத் திருவிழா போல் இருக்கிறதாம்.

இந்தப் புதிய வளர்ச்சி சீதனத்திலும் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தி உள்ளது.

முன்பு 'டொனேசன்' (மாப்பிள்ளையின் தங்கைக்கு இலவசமாகக்கிடைக்கிற சீதனம்) கேட்டவரகள் இப்போது வெளி நாட்



நான் ஒருவருக்கும் ஒரு தும்பிற்கும கூட கடமைப் பட விரும்பவில்லை.

நல்ல இலட்சியம்.

உந்த தீப்பெட்டியைதாருமஇந்த சுருட்டைப் பற்றவைப்பதற்கு.

டுக்கு போகும் செலவை ஏற்றுக் கொள்ளச் சொல்கிருர்களாம். சிலவேளை பெண்ணின் சகோதரர்கள் யாராவது வெளிநாடுகளில் இருந்தால் மாப்பிள்ளையை அல்லது சகோதரர்களை வெளிநாட்டுக்கு கூப்பிடவேண்டும் என்பது திருமணத்தின்போது ஒரு நிபந்தனையாக விடுக்கப்படுகிறது.

வெளிநாட்டில் இரகசிய திருமணம் செய்தாலும், இங்குஇடையில் வரும்போது மாபபிளைகளாகவே வந்து கொழுத்த சீதனத்துடன் இன்ெனுரு திருமணம் செயது செல்பவர்களும் உண்டு. இப்படிப் போன சில பெண்கள் அங்கு நிலைமையை அறிந்ததும் உடனே திரும்பி விடுவதுமுண்டு.

இப்படி திருமணம் செய்ய வருபவர்கள் எல்லோரும் தம்மை 'என்ஜினியர்' என்றே சொல்லிக்கொள்வது வழக்கம். இப்படியாக தம்மை கிறவுண்ட் இஞ்சினியர் (நிலப் பொறியியலாளர்) என சொல்லிக் கொண்ட ஒருவர் அங்கு பிரேதம் தாழ்ப்பதற்கு குழி வெட்டுகிற வேலை செய்வதாக பின்பு தெரியவந்ததாம். தம்பி வெளிநாடு போட்டு வந்தால் கொழுத்த சீதனம் வாங்கலாம் என்று காத்துக்கிடக்கின்ற பெற்றோரை, சில மாப்பிள்ளைகள் வெள்ளைக்காரிகளைக் காவிக்கொண்டுவந்துவெலவெலக்கச் செய்துவிடுவதுமுண்டு.

வேலைகளில் இருக்கின்ற சிலரும் திடீரென வேலைகளை உதறித் தள்ளிவிட்டு வெளிநாட்டுக்குப் போய் சங்கடப்பட நேரிடுவதால் திருமணத்திற்கு முன்பு தம்பிக்கு வெளிநாடு போகிற யோசனை இருக்குதோ என விசாரிப்பதும் பெண்களைப் பெற்றோரின் வழக்கமாகிவிட்டது.

இப்படி ஏற்றுமதியாகின்ற நமது மாப்பிள்ளைகளின் பட்டியலைத் தொகுத்து அவர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதன்மூலம் புரோக்கர் தொழிலில் நல்ல வருவாயைச் சம்பாதிக்கலாம் என்ற ஆலோசனையைசிரித்திரன் மூலம் வழங்கி முடித்துக் கொள்கிறேன்.

# விட்டகுறை... தொட்டகுறையோ

தொகுப்பு
எஸ் சிறிஸ்கந்தராஜா

கண்ணனுக வேஷம் போட்டுக்கொண்டு வந்து நடித்துக் கொண்டிருக்கிருர்: வடநாட்டுச் சங்கீதக்கலைஞர் பலருக்கும் குரு பீடமாக விழங்கிய விஷ்ணுதிகம் பாரும் சபையிலிருந்து பார்த்துக்கொண்டிருக்கிருர். நடித்துக் கொண்டிருந்தவர் பாடும்போது 'நம்பிரான் கண்ணன் குழலோசை தானே என்ற பிரமை பக்தர்களுக்கு ஏற்படுகின்றது.

விஷ்ணுதிகம்பர் தமக்குச் சபையோர் சூட்டிய மாலையை நடித்துக்கொண்டிருப்பவர் கழுத்தில் அணிந்து நீ நிஜமாகவே கண்ணன்தான் அப்பா' என்கிருர்.

இன்ெனுருமுறை திருவாரூரில் வள்ளிநாடகம் நடக்கிறது. சந்தனுக நடிக்கிருர் அதே நடிகர். பைரவி ராகத்தில் ஒருவிருத்தம் பாடுகிருர். பிரபல சங்கீத வித்வான்களின் கச்சேரிகளில் பங்கெடுத்து வந்தவரும் சுமார் எண்பது வயதுள்ளவருமான ஒரு நாதஸ்வரக்காரர் இந்த நடிகரை ஆரத்தழுவி 'இளமையில் உம்முடைய மேதை இதுவானுல், நீர் நிச்சயம் இறைவன் வரப்பிரசாதம் பெற்றவர் தான். நீர் நீடூழி வாழவேண்டும் என்கிருர்.

வேெருரு சங்கீத நிபுணர் தமக்குவந்த ஆனந்தக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு சொல்கிருர் " ஏதோ விட்டகுறை தொட்டகுறையாக இந்த மேதை இந்த மண்ணுலகத்தில் வந்து விழுந்திருக்கிறது. வந்த காரியத்தை முடித்துக்கொண்டு விரைவில் மறைந்துவிடும்" என்ருராம்.

இந்த வாக்கு இந்த இளங் கலைஞரின் விஷயத்தில் பலித்து விட்டது. 1933-ம் ஆண்டு தமது 28வது வயதில் இந்த மேதை காலமானுர்.

பாடகராகவும் நடிகராகவும் ஒருங்கே புகழ்பெற்றுப் பொதுமக்களுக்கு இசையில் ஈடுபாட்டை ஏற்படுத்தி கர்நாடக மெல்லிசை என்ற ஒரு வித இசையை தோற்றுவித்த கிட்டப்பாதான் மேற்படி மேதை.

நல்லோரும் வல்லோரும் பலநாள் வாழ்வதில்லையாம்.

★ ★

சாப்பிடவந்தவர்:
ஆமைஇறைச்சிக்கு ஓடர் செய்து ஒரு மணிநேரமாகுது. இன்னும் வரேல்லே.

ஹோட்டல் சர்வர்:
ஆமை இறைச்சி தானே அது எப்படி வரும் என்று தெரிந்தது தானே.

# பொறுமை —— வாழ்க...

பொறுமை கடலினும்பெரிது. மறுக்க முடியாத உண்மை. சிறு வயதிலிருந்து கேட்டுவரும் மூதுரை, ஆனுல் காலப்போக்கில் நாம் அதை மறந்துவிட்டதாகவே கருதலாம். காரணம்இன்று நாம் ஒவ்வொரு நாளும் பொறுமை கடலினும் பெரிது என்று ஒருமுறையாவது கூற வேண்டி ஏற்பட்டிருக்கிறது.

பங்கீட்டுத் திட்டம் வந்து எவ்வளவோ விடயங்களில்



பங்கீட்டுக் கடைக் கியூவில்

நன்மையைக் கொடுத்தது. அதில் பொறுமையைப் புகட்டுவதும் ஒன்று. பங்கீட்டுப் பொருட்களை வாங்க ஒவ்வொரு கூட்டுறவுக் கடை வாசலிலும் அதுவும் பெண்கள் கால்கடுக்க நிற்பதைப் பார்த்தால் பொறுமையின் சிறப்பை என்னவென்று கூறுவது.

'இல்லாத சாமானை ஏன் சும்மா சும்மா கேக்கிற' இது தான் இருக்கு. 'அது ஒரே கல்லு மண்ணு இருக்கே' வாங்கினுல் வாங்கு இல்லாட்டி எடத்தைக் காலிபண்ணிட்டுப் போ.

'சரியப்பா இதையாவது கொடு என்று ஒன்றுக்குப் பாதியாக அளந்து அல்லது நிறுத்துக் கொடுக்கும் சாமான்களை வெகு பொறுமையுடன் வாங்கிக் கொள்கிறோம்,

ஒரு காலத்தில் சிறு குற்றங்களுக்குத் தண்டனையாக மாணவர்களை வெயிலில் குறித்த நேரத்திற்கு நிற்கவைப்பது பழக்கமாக இருந்தது, இன்று நாம் காண்பதென்ன? அநேகமாக சினிமாத் தியேட்டர்களில்டிக்கெட்கொடுக்கும் இடம் வெயில் சிறிதும் குறையாதபடி படும் இடத்தில் தான் இருக்கும்-

கட்டாயத்தால் கற்றுக் கொண்டிருக்கும் புதிய முறைப்படி வரிசையாக அரைமணி முக்கால் மணி நேரம் சுளீர் என்று படும் கடும் வெயிலில்நிற்கிறோம். வகுப்பு ஆசிரியரை நமக்கு ஞாபகப்படுத்தப் போலிஸ் அதிகாரி ஒருவர் கையில் சிறு பிரம்புடன் 'கியூவை' ப்பார்த்து வரிசையாக நில் என்று சொல்லிக் கொண்டிருக்கிறுர்.

வெயிலில் நிற்பதால் பொறுமையை இழக்கிறோமா? இல்லவே இல்லை. மிகப் பொறுமையோடுதான் நிற்கிறோம். அதுவும் பொறுமையில் ஒரு விதம். இம்மாதிரி வெயிலில் நின்று பொறுமையை பழகுவதற்குப் பணமும் கொடுக்கிறோம்.


பத்திரிகையொன்றில் ஒரு சித்திரக்காரர் பஸ் வருவதற்காக ஒருவர் காத்துக்கொண்


மாத்தளை
கார்த்திகேசு


டிருக்கிற நிலைமையைச் சித்தரித்திருந்தார்; அவர் வந்துநின்றபின் பஸ் வருவதற்குள் ஒருசாண்தாடி வளர்ந்துவிட்டது அவருக்கு சித்திரக்காரரின் சுதந்திரத்தை தவிர்த்து அவர் காட்டியுள்ள

கோயிலுக்குள் திருடப்போன எமது நண்பனைக் காணன் என்ன செய்யிருன் என்று பார்த்திட்டுவா.

பார்த்தேன் அவர் தியானத்தில் இருக்கிறுர்.



நிலைமையைத் தானே நாம் காண்கிறோம். ஒருவர் பஸ்வந்து நின்ற உடனே முட்டி மோதி ஏற முயன்றார். அதுக்குள்ளாக பஸ் புறப்பட்டு விட்டது. முட்டாள் பயல் கண்ணில்லையா ஆள் ஏறுகிறது தெரியலையா அவனுக்கு என்று யாரைக் குறித்துச் சொல்வதென்பதும் தெரியாதபடி தெய்வமேயென்று நின்று விடுகிறார்.

அடுத்த பஸ் வருவதற்கு குறைந்தது முப்பது நிமிடங்களாவது ஆகும். பொறுக்காமல் என்ன செய்வது? பொறுமை கடலினும் பெரிது என்று பாராயணம் செய்ய வேண்டியதுதான்.

காய்கறி கடையில் நாம் முன்னால் கேட்டறியாத விலைவாசிகளைக் கேட்கிறோம் அதை



காய்கறிக் கடையில்

விற்பவர்கள் ஒரு காலத்தில் மரியாதையே உருவமாக இருந்தார்கள். இன்று மரியாதையை மறந்துவிட்டு பேசுகிறார்கள், நாம் பொறுக்காமல் இருக்கிறோமா? மூன்று சதத்துக்கு வாங்கும் கீரைக்கட்டு பதினைந்து சதத்துக்கு மிகப் பொறுமையுடன் தான் வாங்குகிறோம்.

சில 'சலூன்'களில் முன் யோசனையோடு ஒரு சிறிய மேசையில் வருபவர்கள் பொறுமையை இழக்காமல் சிறிது நேரமாவது படித்துக்கொண்டு இருக்கட்டுமென்று பத்திரிகைகள் சில வைத்திருக்கிறார்கள்; இருந்தபோதிலும் நாம் எவ்வளவு நேரம் நம்முடைய முறை வரும் வரை காத்திருக்கிறோம் இதுவும் பொறுமைதான்

ஒரு பத்திரிகை ஆசிரியரிடம் கட்டுரை ஒன்று எழுதி கொடுத்தேன் பிரசுரிப்பதாக சொல்லி வாங்கிக்கொண்டார். இதுவரை பிரசுரிக்கவில்லை, அக்கட்டுரையை படித்தாவது பார்த்தாரா இல்லையா என்று கேட்பதற்கு அச்சமாக இருக்கிறதுஎன்ன செய்வது பொறுத்துத்தான் ஆகவேண்டும இதுவும் ஒருவகைப் பொறுமை தானே!

இவ்வாறு தினசரி நடைமுறையில் நமக்கு பொறுமையின் பெருமையைப் புகட்டுவது காலப்போக்கே.

இன்று தெய்வங்கள் கூட பொறுமை காட்ட வேண்டியுள்ளது. நித்திய பூசை நடந்த கோயில்களில் உற்சவகாலங்களில் ஏற்படுகின்ற சாதி சண்டைகளினால் பூசைகளே இல்லாமல் போயிருக்கின்ற கோயில்களும் உண்டு. சில இடங்களில் பூசை குறைத்தும் குறுக்கியும் நடத்துகிறார்கள். தெய்வங்கள் இவைகளை பொறுக்காமல் என்ன செய்வது?

பொறுமையின் சிறப்பைஎன்றும் மறக்க முடியாதபடி இன்று நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம்.

'பொறுமை கடலினும் பெரிது,

★ ★

## நான் ஒரு முட்டாளுங்க

பசியுடன் இருந்த ஒருவன் கடையில்போய் ஒரு ஒரு ரொட்டியை வாங்கிப் புசித்தான்: ஆனால் பசி அடங்கவில்லை, அதனால் அவன் மேலும் ஒரு ரொட்டியை வாங்கி அதையும் உண்டான், மேலும் பசியிருந்ததால் மூன்றாம முறையாக ஒரு ரொட்டி வாங்கி உண்டான். அதிலும் வயிறு நிறையாததால் அவன் ஒரு தோசையையும் வாங்கி தின்றான்: பசியும் அடங்கி விட்டது.

உடனே தன் கையால் தலையில் அடித்துக்கொண்டு 'என்னைப்போல் மூடன் உண்டோ! மூன்று ரொட்டிகளை வீணாக்கி விட்டேனே, முதலிலேயே ஒரு தோசையை வாங்கித் தின்றிருந்தால் பசி ஆறியிருக்குமே' என்று கூறினான்.

—சோலைக்குயில் ஹஸனி —
கல்முனை-4

வாசகர்:

உங்களின் வசனநடையைப்போல எழுதுவது மிகவும் சிரமம்... மிகவும் கடினமான நடை......

எழுத்தாளர்:

அப்படியா... ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்...

வாசகன்:

உங்கள் கதையை வாசித்து களைத்துப் போய்விட்டேன்.

குட்டிக்கதை

# மன்னர்கள்

சுரண்டி எலும்பனின் முதுகில் ஏறி அமர்ந்து கொண்டான் எலும்பனின் உடலில் தசை இல்லை முதுகு வளைந்திருந்தது, சுரண்டி கொழுத்த மனிதன்.

சுரண்டியை முதுகில் காவிக் கொண்டு எலும்பன் நடந்தான். சுரண்டி மகிழ்ச்சியாக இருந்தான்

நடக்க நடக்க எலும்பனுக்கு களைப்பு ஏற்பட்டது. முதுகு உழைந்து கால்கள் நொந்தன,

ஐயா எனக்கு களைக்கிறது என்றான் எலும்பன்.

''நீயும் மனிதன் தானே, களைக்கத்தான் செய்யும், ஆனல் நீதான் நாட்டின் முதுகெலும்பு, என்றான் சுரண்டி,

எலும்பன் பெருமைப்பட்டு மீண்டும் உற்சாகமாக நடந்தான்

கொஞ்சத்தூரம் பிரயாணம சென்றது,

எலும்பனுக்கு மீண்டும் கழுத்து நொந்தது; கால்கள் உளைந்தன, களைப்பு அதிகமானது.

ஐயா நீங்கள் சரியானபாரம் எனக்கு களைக்கிறது, என்றான்.

'நான் பாரமில்லை நீ பாரமெண்டு நினைக்கிறாய் ஆனல் உனக்குக் களைக்கும்தான், நீயும் என்னைப்போல் மனிதன் தானே. என்று சுரண்டி கூறினன்.

மேலும் சிறிதுதூரம எலும்பன் நடந்தான்.

ஐயா நீங்கள் என் கழுத்தை நெரிக்கிறீர்கள் என்றான்.

மடையா! எனக்கு மனிதாபிமானம் இல்லையா? நான் கழுத்தை நெரிக்கவில்லை இருகால்களாலும் உன்னை அணைத்துப் பிடித்திருக்கிறேன், உன் கஷ்டம் எனக்குத் தெரியாதா? என்றான் சுரண்டி,

எலும்பன் அதைக்கேட்டு உற்சாகமாக நடந்து கொண்டிருந்தான்.

சுரண்டி அவன் முதுகில் சந்தோஷமாக இருந்தான்,

அதிக தூரம் செல்லவில்லை எலும்பன் களைத்து விட்டான்,

ஐயா எனக்கு மிகவும் களைக்கிறது உடம்பெல்லாம் உழைகிறது என்று கூறினன்,

'கஷ்டங்கள் துன்பங்கள் வரும்போது கடவுளை நினைத்துக் கொள், நானும் அவனைத்தான் நினைத்துக்கொள்வேன் எல்லாம் அவன்செயல்' என்று பக்தியோடு கூறினன்,

கண்களை நிமிர்த்திப் பார்த்தான் எலும்பன் வானம்தான் தெரிந்தது. கடவுளே என்களைப்பையும் உடலுழைவையும் போக்கிவிடு என்று கூறிக் கொண்டு நடந்தான்.

மேலும் நாலு கவடுகள் எடுத்துவைக்க களைப்பு மேலிட்டது,

ஐயா நீங்களும் நானும் மனிதர்கள் தானே? என்று சுரண்டியிடம் கேட்டான்.

'ஆம், ஆம் உனக்கும்எனக்கும் ஒரு வித்தியாசமுமில்லை இருவரும் சமத்துவமானவர்கள் என்றான் சுரண்டி.

**யோ. பெனடிக்ற்பாலன்**

---

**சட்டத்தரணி களுக்கு**

★ தகழி சிவசங்கரப் பிள்ளை ஒரு வழக்கறிஞர், இவர் எழுதிய 'செம்மீன்' பாத்திரங்கள் இவரிடம் வழக்குத் தாக்கல் செய்ய வந்தவர்களே.

● ●

★ கல்கி நாவல் போட்டியில் இரண்டாவது பரிசுபெற்ற நாவலான 'கல்லுக்குள் ஈரம்' எழுதிய ர. அ. நல்லபெருமாள் ஒரு வழக்கறிஞர்.


● ●

★ சிறுகதை, கட்டுரை எழுத்தாளரான எம். எஸ். மகராஜன் ஒருநீதிபதி.

● ●

★ கலாவிமர்சகரும் எழுத்தாளருமான பி. வி. ராஜமனர் ஒரு நீதிபதி.

---



**கண் காட்சிச் சாலையில் உள்ள ஓவியங்கள் எத்தனை முட்டாள்களின் விமர்சனங்களை பொறுமையுடன் சகித்துக் கொண்டிருக்கின்றன.**

இதைக் கேட்ட எலும்பனுக்கு பெரும் புளுகம்.

சுறுசுறுப்பாக கால்களை எடுத்து வைத்து நடந்தான்.

சிறிது நேரத்தில் கால்களின் நோவும் முதுகு உளைவும் அவனுக்குத் தெரிந்தது.

'ஐயா!'

'என்னடா!'

நாங்கள் இருவரும் சமத்துவமானவர்கள் தானு?

ஆம், நிச்சயமாக இதில் சந்தேகமில்லை.

அதுதான் எனக்கு வேணும்.

எலும்பன் கால் அடிகள் வேகமாயின.

சொற்ப தூரம்செல்லவில்லை எலும்பனுக்கு முதுகு உளைவு.

ஐயா ஒரு சந்தேகம்!

என்ன?

எனக்குத் தெரிந்த காலம் முதல் நீங்கள்தானே என் முதுகில் ஏறியிருக்கிறீர்கள்?

'ஓ! அது அவனவன் தலைவிதி அதை யாராலும் மாற்ற முடியாது' என்று வலியுறுத்திக் கூறிஞன். எலும்பன் விசுவசித்துக்கொண்டு பெருமூச்சோடு முன் நடந்தான்.

களைப்பும் முதுகுளைவு,மகால் நோவும் அதிகரித்தன.

'ஐயா நாங்கள் இருவரும் சமத்துவமானவர்கள் தானே" என்று அவன் சுரண்டியிடம் கேட்டான்.

சுரண்டி கடுமையாகயோசித்தான், முதுகில் இருந்து இறங்கி எலும்பனின் பக்கத்தில் நின்ருன்

'என்னையும் உன்னையும்பார். இருவருக்கும் என்ன வேறுபாடு இருவரும் மனிதர்கள் இருவரும் சமத்துவமானவர்கள். ஜனநாயகத்தில் நாம மன்னர்கள்" என்று கூறிஞன்,

மனம் மிகமகிழ்ந்த எலும்பன் குனிந்துநின்று சிரித்தான், சுரண்டி அவன் முதுகில் ஏறி அமர்ந்தான்,

அவனைக் காவிய எலும்பன் 'ஜனநாயகம் வாழ்க' என்று கத்தியவாறு நடந்துகொண்டிருந்தான்.

சுரண்டியின் சுகமான பிரயாணம் போய்க்கொண்டிருக்கிறது.

★ ★

## தொப்பியும் படமும்

- சோலைக்குயில்ஹஸனி -

முன்ஞள் அமெரிக்கத் தொழில்துறை மந்திரியான 'பிரான்சிஸ் பெர்க்கின்ஸ் ஒரு நாள் மாலை படக்காட்சி ஒன்றிற்கு சென்றிருந்தார். தமக்குப் பின்புறமாக அமர்ந்திருப்பவருக்குத். தம்தொப்பி மறைக்குமோ என்னும் ஐயம் ஏற்பட்டது அவருக்கு

திரும்பிப்பார்த்து 'தொப்பி மறைக்கிறதா கூறுங்கள் நான் கழற்றி விடுகிறேன்" என்ருர் அவர்.

''தயவுசெய்து வேண்டாம். படத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் காட்டிலும் உங்கள் தொப்பியை பார்த்துக் கொண்டிருக்கலாம் போல் தோன்றுகிறது. உங்கள் தொப்பி வேடிக்கையாய் இருக்கிறது' என்ருர் அந்த மனிதர்,

● ● ●

## மைனர் மச்சான் -மாயன்



# சிரித்திரு

நோயாளி:

டாக்டர்... என்ன மருந்து என்று இந்தத் துண்டில் எழுதியிருக்கிறீர்கள்?

டாக்டர்:

நான் எழுதியது எனக்கும் விளங்காது... அது மருந்து கலப்பவருக்குத்தான் விளங்கும்.

— ஜோக்கிரட்டீஸ்.

---

ஒருவர்;

இதுதான் எனது மகள் வரைந்த சூரிய அஸ்தமனக் காட்சி... அவள் வெளிநாட்டில் தான் ஓவியம் படித்தவள்.

மற்றவர்:

அதுதானே கேட்டேன் இம்மாதிரியான சூரியஸ்தமானக் காட்சியை ஒருபோதும் உள்நாட்டில் நான் கண்டதேயில்லை.

## விளக்கும் வழக்கும்

பாதையின் ஆபத்தான ஓர் இடத்தில் கவனயீனமாக கார் ஓட்டியதால் காயமடைந்த சாரதிமீதுவழக்கு நடந்துகொண்டிருந்தது. அந்த நேரத்தில் அந்த இடத்தை காவல் புரிந்துகொண்டிருந்த ஒரு கிழவன் சாட்சியம் சொல்லவேண்டியிருந்தது சாரதியின் வழக்கறிஞர் மிகச் சாமர்த்தியமாகக் குறுக்கு விசாரணை செய்தும் கிழவனை மடக்கவே முடியவில்லை. தான் விழக்கைத் தூக்கிக்காட்டி சமிக்ஞை செய்ததாகவும் ஆனால் சாரதிதான் அதைக் கவனிக்கவில்லையென்றும் கிழவன் அடித்துச்சொல்லி விட்டான்.

மறுநாள் பாதையின் மேலதிகாரி கிழவனைக் கூப்பிட்டார். நேற்று மிக்க் கெட்டிக்காரத்தனமாகப் பதில் சொன்னாயே! குறுக்கு விசாரணையின் போது எங்கே எக்கச்சக்கமாய் உளறி மாட்டிக்கொண்டு விடுவாயோ என்று நான் பயந்துகொண்டே இருந்தேன் என்றார்.

'அந்த விளக்கு அப்போது எரிந்துகொண்டிருந்ததா என்று அங்கே வழக்கறிஞர் கேட்டுவிடுவாரோ என்று நானும் பயந்துகொண்டே இருந்தேன், நல்ல வேளையாக வழக்கறிஞர் கேட்கவே இல்லை. என்றார் அந்தக் கெட்டிக்காரக் கிழவன்.

—எழுத்தாளன்.

---

ஒருவர்;

வீட்டில் இருக்கும் உமக்கு எதற்கு குடை?

மற்றவர்:

வீட்டுக்குள் மழைக்கு பிடிப்பதற்கு... நான் இருப்பது வாடகை வீடு.


---

சரி உன்னுடைய மகளுக்கு என்னுடைய மகளைக் கட்டித்தருவதற்கு சம்மதம்... லண்டனில் வீடு சீதனமாகத் தர முடியுமா... என்னுடைய மகன் லண்டன் உத்தியோகத் தணையா.

வெள்ளவத்தையில் வீடு சீதனம் கேட்ட காலம் போய் இப்போ லண்டனில் வீடு... காலம் மாறிப்போச்சு.

---

**சவாரித்தம்பர்** — **சுந்தர்**



# இரவல் நகை

கணவன்: ஒருமணித்தியாலமா யாரோடுவாசலில் நின்று கதைத்துக்கொண்டிருந்தாய்?
மனைவி; மிஸிஸ் சிமித்துடன்... அவளுக்கு உள்ளே வந்து கதைக்க நேரமில்லையாம்.

★ ★

பெற்றோரின் விருப்பமின்றி மணம்முடித்த தம்பதிகள் தமக்குவந்த தந்திகளை படித்துக்கொண்டனர்.
மனைவி: இதோ உங்கள் தந்தையிடமிருந்து ஒருதந்தி...
கணவன்: என்னவாம்...?
மனைவி; எல்லாவற்றையும் மன்னித்துவிட்டேன் வீட்டிற்குவரவேண்டாம்.

● ●

வாடிக்கையாளர் இந்த தூக்கமாத்திரை நல்லது என்கிறீர் அப்படித்தானே...
மருந்து வியாபாரி; ஆமாம் இத்துடன் அலாரம் மணிக்கூடொன்றும் விநியோகிக்கிறோம்.

o o o

டாக்டர்: உங்களுக்கு குளிர் ஜுரம்! அப்படித்தானே... ஜுரம் வரும்போது நடுக்கத்தில் பல்லெல்லாம் கிடுகிடுக்கின்றனவா?
வயோதிப மாது: தெரியாதுடாக்டர் பல்செற்றைகழட்டி மேசையில் வைத்துவிட்டேன்...

o o o

நான் சொர்க்கத்துக்கு போனதும்
ஷேக்ஸ்பியர் அங்கு இருந்தால் அவரிடம்
நீங்கள்தான் இத்தனை நாடகங்களையும்
எழுதினீர்கள், நான் நம்பவில்லை என்பேன்"
'அவர் அங்கு இல்லாவிட்டால்?'
நான் சொல்லவேண்டியதை நீயே சொல்லிவிடு

o o o

★ நீதானே சொன்னாய் அவள் அழகாகப் பாடுவாள் என்று?
● இல்லை அப்படிச் சொல்லவில்லையே
★ பின்எப்படிச் சொன்னாய்?
● அழகான பாடகி என்று.

o o o

நீதிபதி: இத்திருட்டை நீ தனியாகவா செய்தாய்?
திருடன்; ஆம் பிரபு... இந்தக்காலத்தில் ஒருவரையுமே நம்பக்கூடாது பாருங்க...

o o o

★ நான் உன்னிடம கடன் வாங்கியதாக ஞாபகமில்லையே.
● நீசரியான குடிவெறியில் இருக்கும்போதுதான் நான் கடன் தந்தேன்.
★ ஓ... அதை... நீ சரியான குடிவெறியில இருக்கும்போது நான் திருப்பித் தந்துவிட்டேன்.

## ஒரு இனத்தின் வரலாறு

இருளப்பன்
மலையகத்தின்-
இருள்மண்டிய
காடுகளை அழித்தான்
அவன்மகன்-
முனியாண்டி
மலைமீது தேயிலையை
வளர்த்தான்
அவன் மகள் ராமாயி
தேயிலைக்கொழுந்துகளை
பறித்தாள்...
இந்த மண்ணுக்கு
அனைவருமே
உரமாக...
அவள்பேரன்
செங்கோடன்
நாடற்றவர் வரிசையில்
நாடுகடத்தப்படுகிறான்.

—ராதேயன்

ஆசிரியர்:
ஏண்டா குமார் நீ வீட்டுப் பாடம் படிக்கவில்லை?

மாணவன்;
ரேடியோவை நிற்பாட்டி நிம்மதியாய் படிக்கலாமென்றால் அம்மாவிட்டால்தானே அவ ஒரு சினிமாப்பைத்தியம்.

இப்படி மாமி மருமகள் அன்பை நான் உலகத்தில்காணவில்லை மருமகள்பிரிந்து தனிக்குடித்தனம் போகும்போது மாமியார் எப்படி அழுதாள்தெரியுமா
உனக்குப்பயித்தியம் குறைகூறும் இன்பத்தை அனுபவிக்க ஒருத்தரும் இல்லையே என்று கண்ணீர் கொட்டியிருக்க வேண்டும.

## விஞ்ஞானியின் காதல் கடிதம்

**பாசமிகு காதலனே!**


என் மனம் ஆகிய பொட்டாசியம் உன் மனமாகிய ஒட்சிசனை கவருகின்றது.

உம்மைக்காணும் போதெல்லா அமோனியாவை அதிகம் நுகர்ந்தவன்போல் மயங்குகின்றேன். நீர் அன்றொருநாள் உமது பொற்டாசியம் குளோரைட்டை ஒத்த மேனிக்கு செப்புக் காபனேற்றை ஒத்த பெல்போட்டம் அணிந்து கொண்டு மங்கனீசி ரொட்சைட்டு நிறத்தைஒத்த தம்பியுடன் பஸ்தரிப்பில் நின்றபொழுது என்மனம் நீரில் இட்ட சோடியத்துண்டுபோல் துடிதுடித்தது.

பின் மறுநாளும் குளோறியம் ஒட்சைட்டு நிறத்தை ஒத்த சண்கிளாசுடன் பெரசு கந்தகசயனேற்றின் நிறத்தை ஒத்த பெல்போட்டம் அணிந்து கொண்டு வரும் காட்சியைக் கண்டேன். நீர் அவர்களுடன் வரும்பொழுது செவ்வீயம்போல் என் கண்ணுக்கு மின்னியது. நீர் அவர்களுடன் சிரித்துக்கொண்டு வரும் பொழுது உமது பல் கல்சியம் காபனேற்றுப்போல் காட்சி தந்தது.

நானோ உம்மைவிரும்புகின்றேன். நீரோ என்னை விரும்புவது போல் தெரிவதில்லை. ஆகவே உமது பிளாற்றினம் மனதைச் செம்பாக தாழ்த்துவீராக, இல்லாவிட்டால் உமது மனதைக் குளப்புவதற்காக அரச நீர் கொண்டுவருவேன்.

இங்ஙனம்
அன்புக்காதலி
ஊர்க்குருவி.



சிநேகிதி:
நீ இயமனிடம் கணவனின் உயிருக்குப்போராடியகாட்சி ரொம்ப உருக்கமாக இருந்தது... சாவித்திரி வேஷம் உனக்கு பிரமாதம். அதுசரி உன் கணவன் எங்கே?

நடிகை;
விவாகரத்துச் செய்திட்டேன்


அறுசுவை உணவிற்கு
அருஞ்சுவையூட்ட....

★ உங்கள் உடம்பையும் உள்ளத்தையும்
பூரிக்கவைக்கும் சுத்தமான உழுந்தில்
தயாரிக்கப்பட்ட உபசத்துணவு



**'கிருஷ்ணா அப்பளம்'**

விருந்து வைபவங்களுக்கான விசேஷ தயாரிப்பு

**டயமண்ட் அப்பளம்**

ஆகியவைகளை சேர்த்துக்கொள்ள மறவாதீர்கள்

தயாரிப்பாளர்:-

என். ஸ்ரீதரன்
217, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.